# ஆண்டறிக்கை

# 2014

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

இலக்கம் **117**, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட.

**உள்ளடக்கம்**


- 2014 **வருடாந்த** அறிக்கையை கௌரவ செயலாளரிடம் சமர்ப்பித்தலும் —— 03
- **கௌரவ தலைவரின் செய்தி** —— 04
- நிறுவனத்தின் நோக்கு மற்றும் அரும்பணி பற்றிய கூற்று —— 05
- பணிப்பாளர் சபை —— 06
- நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு —— 07
- முன்னுரை —— 08

**பிரிவுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களின் அறிக்கைகள்**

- நெறிப்படுத்தல் பிரிவு- —— 11
- காப்புறுதிப் பிரிவு —— 20
  - ❖ கமத்தொழில் காப்புறுதி நடவடிக்கைகளும் கால்நடைக்காப்புறுதி நடவடிக்கைகளும்
- கமக்காரர் ஒய்வூதியப் பிரிவு —— 23
  - ❖ கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும்
  - ❖ கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
- நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு —— 31
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு —— 37
- நிதிப்பிரிவு —— 40

**கணக்குகள்**

- கடந்த ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள் 42
- ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்கான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்று- —— 46
- கமத்தொழில் காப்புறுதித் திட்டம் —— 50
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் —— 79
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் —— 100

**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள்**

- கமத்தொழில் காப்புறுதித் திட்டம் —— 119
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் —— 131
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் —— 144

**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளுக்கான பதில்கள்**

- கமத்தொழில் காப்புறுதித் திட்டம்- —— 154
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் —— 161
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் —— 169

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams } රක්ෂණ / ரக்ஷன / Rakshana

117, සුභද්‍රාරාම පාර, ගංගොඩවිල, නුගේගොඩ
117, Subadrarama Rd, Gangodavila,Nugegoda
තැ. පෙ. 21, த. பெ. 21 P.O. Box 21

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No. } 3/1/13
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No. }
දිනය / திகதி / Date } 2016/01/05

செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு,
"கொவிஜன மந்திரய",
80/5, ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல.

செயலாளர் அவர்களே,

**<u>ஆண்டறிக்கை - 2014</u>**

2014 ஆம் ஆண்டில் சபையின் நிர்வாக, நெறிப்படுத்தல் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்ட விதம் மற்றும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய 2014 ஆம் ஆண்டுக்கான சபையின் ஆண்டறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

***சிட்னி கஜநாயக்க***

தலைவர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

| | සභාපති / தலைவர் / Chairman | අධ්‍යක්ෂ ජනරාල් / Director General | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephones / ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 011-2812571<br>011-2812572<br>011-2812573 | 011-2812574 | 011-5384000 |

# <u>கௌரவ தலைவரின் செய்தி</u>

அபாயநேர்வு முகாமைத்துவ திறமுறை என்ற வகையில் இலங்கையின் விவசாயத்துறைக்கு கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ் செய்து திடீர் அனர்த்தத்தின்போது கமக்காரர்களுக்கு ஏற்படுகின்ற பொருளாதார நட்டத்தைக் குறைத்துக்கொள்வதன் மூலமாக உள்நாட்டு விவசாயத்தைப் போன்றே விவசாயியையும் மேம்படுத்துவதற்காக நான்கு தசாப்தங்களாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை ஊடாக ஈடேற்றப்பட்டுள்ள அரும்பணி அளப்பரியது.

2011 ஆம் ஆண்டில் இந்த சபையினால் முன்வைக்கப்பட்ட சாத்தியவள அறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்படுவதற்காக பிறிதொரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த "கெத்தட்ட அருண –பொஹொர திரிய" மானிய உர வேலைத்திட்டத்தின் கீழ் இழப்பீடு செலுத்தும் பணிகளை 2014/2015 பெரும்போகத்தில் இருந்து கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்தமை 2014 ஆம் ஆண்டில் சபை பெற்ற தனித்துவமான வெற்றிவாய்ப்பாக அமைகின்றது.

2014 வரவு செலவு முன்மொழிவுகள் மூலமாக 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டமையால் இரண்டு வருடகாலமாக நிதியம் பூச்சியநிலையுற்றமையால் இடைநிறுத்தப்பட்டிருந்த கமக்காரர் ஓய்வூதியம் செலுத்தும் பணிகளை 2014 சனவரி மாதம் தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்க இயலுமானமையும் 2014 ஆம் ஆண்டில் சபை பெற்ற தனித்துவமான வெற்றியாகும்.

2014 அம் ஆண்டில் சபையின் காப்புறுதித் திட்டங்கள் மூலமாக சபை ஈட்டியுள்ள காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 119 மில்லியன் ரூபாவாக அமைவதோடு அது 2013 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 26 மில்லியன் ரீபா அதிகரிப்பாக அமைகின்றது.

அதற்கிணங்க சபையின் செயலாற்றுகையில் விருத்தியை அடைந்த வெற்றிகரமான வருடமென 2014 ஆம் அண்டினைக் குறிப்பிட இயலும்.

**சிட்னி கஜநாயக்க**

**தலைவர்**

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

# நோக்கு

உள்நாட்டு விவசாயத்துறையின் உன்னதமான பாதுகாவலனாக அமைவதன் ஊடாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் கமத்தொழில் காப்புறுதி நிறுவனமாக அமைதல்

# அரும்பணி

கமத்தொழில் காப்புறுதியையும் பாதுகாப்பினையும் வழங்குவதற்கான கூட்டுமுயற்சி மற்றும் நிறுவனங்களின் இணைப்பாக்கத்தின் ஊடாக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

## பணிப்பாளர்சபை - 2014

| | |
|---|---|
| 1. கலாநிதி (திருமதி) தமித்தா த சொய்சா<br>செயலாளர், உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு<br><br>சட்டத்தரணி திரு. ஆரியதிலக தஹநாயக்க | தலைவர் (2014.01.19 வரை)<br><br>தலைவர் (2014.01.20 இல் இருந்து) |
| 2. திருமதி தமித்தா ரத்நாயக்க<br>பணிப்பாளர்,<br>திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்,<br>பொது திறைசேரி,<br>கொழும்பு 01. | அங்கத்தவர் |
| 3. திரு. எம்.ஏ.எஸ் வீரசிங்க<br>கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம்,<br>கமநல சேவைகள் திணைக்களம்<br>கொழும்பு 07. | அங்கத்தவர் |
| 4. திரு.ரீ.எச்.சீ.எஸ். பெரேரா<br>பணிப்பாளர் – சமூக மற்றும்<br>பொருளாதாரத் திட்டமிடல்,<br>கமத்தொழில் திணைக்களம், பேராதனை. | அங்கத்தவர் |
| 5. டாக்டர்(திரு) பீ. சிவயோகநாதன்,<br>மேலதிக பணிப்பாளர்நாயகம்,<br>விலங்கு உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,<br>பேராதனை. | அங்கத்தவர் |
| 6. திரு. ஏ. லக்காதாஸ்<br>சிரேட்ட உதவிச் செயலாளர்(நிர்வாகம்)<br>கடற்றொழில், நீரக வளங்கள் அமைச்சு,<br>கொழும்பு 10. | அங்கத்தவர் |
| 7. திரு. டப்ளிவ். ஏ.சீ. திசேரா<br>உதவிப் பொது முகாமையாளர்<br>இலங்கை வங்கி | அங்கத்தவர் |
| 8. கலாநிதி (திரு) டீ.எம்.என். திசாநாயக்க<br>மேலதிக செயலாளர்(அபிவிருத்தி)<br>கமத்தொழில் அமைச்சு<br>பத்தரமுல்ல | அங்கத்தவர் |

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
தாபனக் கட்டமைப்பு



# முன்னுரை

திடீர் அனர்த்த நிலைமைகளின் மத்தியில் உள்நாட்டு விவசாயத்யையும் விவசாயியையும் பாதுகாப்பதில் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை ஈடேற்றுவதற்காக 1973 இன் 27 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலமாக கமத்தொழில் காப்புறுதிக்கான ஒரேயொரு நிறுவனமென்றவகையில் கமத்தொழில் காப்புறுதிச்சபை தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அபாயநேர்வு முகாமைத்துவ திறமுறையென்ற வகையில் இலங்கையின் விவசாயத்துறைக்கு கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ்செய்து திடீர் அனர்த்தவேளையில் கமக்காரர்களுக்கு ஏற்படுகின்ற பொருளாதார நட்டத்தை குறைத்துக்கொள்வதற்காகவும் அத்தகைய சந்தர்ப்பத்தில் விவசாயக்கடன்களை வழங்குகின்ற நிதிநிறுவனங்களுக்கு தமது நிதிசார் உறுதிநிலையினை விருத்திசெய்து கொள்வதற்காக கடந்த நான்கு தசாப்தங்களாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை ஆற்றிய அரும்பணி அளப்பரியதாகும்.

2014 ஆம் ஆண்டிலும் இச்சபையினால் கமத்தொழில் மற்றும் பொதுக் காப்புறுதிச் செயற்றிட்டங்கள் பல நாடளாவியரீதியில் அமுலாக்கப்பட்டுள்ளதோடு அத்தகைய செயற்றிட்டங்கள் மூலமாக இவ்வாண்டில் சபை ஈட்டியுள்ள காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 119 மில்லியன் ரூபாவாகும். அது 2013 ஆம் ஆண்டில் ஈட்டியுள்ள காப்புறுதி கட்டுப்பண வருமானத்துடன் சார்புரீதியாக 26 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

## வருடாந்த கட்டுப்பண வருமானம் 2010 தொடக்கம் 2014வரை

| செயற்றிட்டங்கள் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் | 79.69 | 119.07 | 99.90 | 82.16 | 99.50 |
| கால்நடைக் காப்புறுதித் திட்டம் | 12.77 | 17.86 | 15.80 | 8.89 | 12.06 |
| களஞ்சிய மற்றும் விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டங்கள் | 3.40 | 5.88 | 6.50 | 1.53 | 0.25 |
| சுவவெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதித் திட்டங்கள் | 9.62 | 14.23 | 2.50 | 0.74 | 7.74 |
| **மொத்தம் ( மில். ரூபா)** | 105.48 | 157.04 | 124.70 | 93.32 | 119.54 |

-



கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதை மீண்டும் தொடங்கக் கிடைத்தமையும், “கெத்தட்ட அருண – பொஹொர திரிய” காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கும் வாய்ப்பு சபைக்கு கிடைத்தமையும் 2014 ஆம் ஆண்டில் சபையின் செயல்விளைவுகளின் மத்தியில் முதன்மைத்தானத்தை உரித்தாக்கிக் கொண்டுள்ளன. சபையின் பெயர் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைய காரணமாக அமைந்த கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் நிதியங்கள் பூச்சியநிலையடைந்தமையால் இரண்டு வருட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கமக்காரர் ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கைகளை 2014 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்க இயலுமானமை இவ்வாண்டில் சபை பெற்ற தனித்துவமான வெற்றியாகும். 2014 வரவு செலவுப் பிரேரணைகள் மூலமாக அதற்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதால் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் ஓய்வூதியம் பெறுனர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் செலுத்துதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. கமக்காரர்களுக்கு செலுத்துகின்ற விசேட நன்றிக்கடன் என்றவகையில் வயது 63 வருடங்களுக்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுனர்களுக்கான குறைந்தபட்ச மாதாந்த ஒய்வூதியத்தை ரூ. 1,250/= இல் இருந்து ரூ. 5,000/= வரை அதிகரித்துச் செலுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கமக்காரர் ஓய்வதியத்தை மீண்டும் செலுத்ததவதற்கான ஆரம்ப வைபவம் 2014.01.28 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாகம் றுஹுணு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டதோடு பொதுமக்களினதும் அரசியல் தலைமைகளினதும் அரச அலுவலர்களினதும் பங்கேற்புடன் மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டதன் மூலமாக கமக்காரர்களின் நன்மதிப்பினை 2014 ஆம் ஆண்டில் சபையினால் மீண்டும் பெற்றுக்கொள்ள இயலுமாயிற்று.

அத்துடன் மானியத் திட்டத்தின் கீழ் உரம் பெறுகின்ற கமக்காரர்களுக்காக பயிர்க்காப்புறுதித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியவள அறிக்கையொன்று 2011 ஆம் ஆண்டில் சபையினால் தயாரிக்கப்பட்டு நிதி, திட்டமிடல் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் 2012 வரவு செலவு முன்மொழிவுகளில் அங்கீகரிக்கப்பட்ட புதிய காப்புறுதி செயற்றிட்டத்தை அமுலாக்கும் செயற்பொறுப்பு சபைக்கு உரித்தாகவில்லை. ஆயினும் அச்செயற்றிட்டத்தை அமுலாக்கிய நிறுவனம் எதிர்நோக்க நேரிட்ட சிக்கல்கள் பற்றியும் உள்நாட்டு விவசாயத்துறையின் முன்னோடி காப்புறுதி நிறுவனம் என்ற வகையில் சபையிடம் உள்ள அனுபவத்தையும் ஆற்றலையும் கருத்திற்கொண்டு “கெத்தட்ட அருண – பொஹொர திரிய” காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கும் முழுப்பொறுப்பினை 2014/2015 பெரும்போகத்தில் இருந்து கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதோடு அதுவும் 2014 அம் ஆண்டில் சபை பெற்ற தனித்துவமான வாய்ப்பு எனக் குறிப்பிடப்பட இயலும்.

சபையின் வருடாந்த கட்டுப்பண வருமானத்தின் அதிக சதவீதம் ஈட்டப்படுகின்ற பயிர்க்காப்புறுதித் திட்டம் மூலமாக 2014 ஆம் ஆண்டிலும் அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள ஆற்றல் கிடைத்துள்ளதோடு அது 2013 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக நோக்குகையில் 26 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும். குறிப்பாக கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதலை மீண்டும் ஆரம்பித்ததால் சபை மீதான கமக்காரர்களின் நம்பிக்கை மீண்டும் உறுதிசெய்யப்பட்டமையும் 2014-08-01 தொடக்கம் 2014-12-31 வரை விசேட ஊக்குவிப்புப்படி செலுத்தும் வழிமுறையைக்

கொண்டதாக அமுலாக்கப்பட்ட சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதித் திட்டங்களுக்காக உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்வதற்கான விசேட மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் காரணமாக மேற்படி செயற்றிட்டங்கள் மூலமாக 2013 ஆம் ஆண்டினைப் பார்க்கிலும் 6 மில்லியன் ரூபா வருடாந்த வருமானத்தை 2014 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொள்ள இயலுமாயிற்று. அத்துடன் கால்நடைக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2013 அம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட கட்டுப்பணத் திருத்தங்கள் மற்றும் விசேட மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் உச்சப் பெறுபேறுகளை 2014 ஆம் ஆண்டில் அடைய இயலுமாயிற்று. அதற்கிணங்க 2013 ஆம் ஆண்டில் 7 மில்லியன் ரூபாவாக அமைந்த கால்நடைக் காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 2014 ஆம் ஆண்டில் 12 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

மிகையான வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 2014 ஆம் ஆண்டிலும் பிரதான விவசாய மாவட்டங்களில் பயிர்களுக்கு அதிகளவில் சேதமேற்பட்டதோடு இழப்பீடு கணிப்பிடுகையில் சபையினால் அமுலாக்கப்படுகின்ற புதிய தொழில்நுட்ப வழிமுறைகளைக் கடைப்பிடித்து 2014 ஆம் ஆண்டிலும் காப்புறுதி செய்துகொண்ட கமக்காரர்களின் பயிர்ச் சேதங்களுக்காக துரிதமாக இழப்பீட்டுத் தொகைகளைச் செலுத்த சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் பல மாதங்களாக நிலவிய வரட்சி காரணமாக உரிய காலப்பகுதியில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இடம்பெறாமையும் இந்த வருடத்திற்குரிய நிதிசார் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதில் பாதகமான தாக்கத்தை எற்படுத்தியது. அத்துடன் கமக்காரர் ஒய்வூதியம் செலுத்தும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும் மேற்படி ஒய்வூதியத்தை துரிதமாக கமக்காரர்களுக்கு வழங்கும்பொருட்டு தலைமையகத்தைப் போன்றே மாவட்ட அலுவலகங்களிலும் இணைக்கப்பட்டுள்ள பதவியணிக்கும் 2014 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்கள் சிலவற்றில் அதிக நேரத்தைச் செலவிட நேர்ந்தமையும் ஏனைய காப்புறுதிச் செயற்றிட்டங்களை விரிவாக்க இருந்த வாய்ப்புகள் குறைவடைய காரணமாக அமைந்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் சபையின் சேவைக்காக புதிதாக இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு ஆறு உத்தியோகத்தர்கள் இளைப்பாறி உள்ளனர். உரிய திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 421 ஆக அமைந்துள்ளதோடு தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 296 ஆகும். அதற்கிணங்க வெற்றிடங்களின் எண்ணிக்கை 125 ஆகும்.

சபையின் செயற்பொறுப்பில் தனித்துவமான ஆண்டாக அமைந்த 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் பணிகளின் செயல்விளைவு இவ்வறிக்கை மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# நெறிப்படுத்தல் பிரிவு

## நெறிப்படுத்தல் பிரிவு

விவசாயப் பொருளாதாரமொன்றைக் கொண்டதும் 30% ஐ விஞ்சிய விவசாய உழைப்புப் படையினரைக் கொண்டதுமான ஒரு நாடெனும் வகையில் விவசாயி எதிர்நோக்குகின்ற உற்பத்தி அபாயநேர்வுச் சாத்தியத்தைப் போன்றே விவசாய உற்பத்திகளுக்கு உரிய பெறுமதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக விவசாய அபாயநேர்வு முகாமைத்துவத்தின்போது அரசாங்கம் பிரயோகிக்கின்ற பிரதான மாற்றீடாக அமைவது கமத்தொழில் காப்புறுதியாகும். அது சம்பந்தமான அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் அமுலாக்கி உள்நாட்டு விவசாயத்தின் உன்னதமான பாதுகாவலன் என்றவகையில் விவசாயிக்கு உறுதிநிலையைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதன் மூலமாக விவசாய உற்பத்திகளை மேம்படுத்துவதில் பாரிய செயற்பொறுப்பினை ஈடேற்றுகின்ற ஒரேயோர் அரச விவசாயக் காப்புறுதி நிறுவனம் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையாகும்.

இச்சபையின் சேவைகளை கமக்காரர்கள் மத்தியில் விரிவாக்குகையில் முக்கியமான செயற்பொறுப்பினை ஆற்றுகின்ற பிரிவென நெறிப்படுத்தல் பிரிவினை எடுத்துக்காட்டலாம். நிறுவனத்தினால் அமுலாக்க எதிர்பார்க்கின்ற எதிர்கால வேலைத்திட்டத்தை உள்ளிட்ட கூட்டாண்மைத் திட்டம், செயற்பாட்டுத் திட்டத்தை உள்டக்கியதாக அனைத்துவிதமான தாபனத் திட்டங்களைத் தயாரித்தல், அத்திட்டங்களை அமுலாக்கச் செய்விப்பதற்காக நாடளாவிய ரீதியில் பரந்துள்ள சபையின் அனைத்து மாவட்டங்களையும் நெறிப்படுத்துதலும் நிர்வாகமும், அத்திட்டங்களை அமுலாக்குகையில் தோன்றுகின்ற அனைத்துவிதமான தேவைகளை நிறைவுசெய்தல் போன்ற பாரிய செயற்பொறுப்பு நெறிப்படுத்தல் பிரிவு மூலமாகவே ஈடேற்றப்படுகின்றது.

விவசாயத்துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்ற ஒரேயோர் அரச நிறுவனமென்ற வகையில் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்சஅளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு 2014 ஆம் ஆண்டிலும் பல்வேறு செயற்திட்டங்களை நாடளாவிய ரீதியில் அமுலாக்க நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன் மூலமாக 2014 ஆம் ஆண்டில் சபை ஈட்டியுள்ள காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 119 மில்லியன் ரூபாவாகும். கடந்த ஆண்டின் வருமானமான 93 மில்லியன் ரூபாவுடன் சார்புரீதியாக நோக்கினால் 26 மில்லியன் ரூபா வளர்ச்சியாகும். இந்த வருமானத்தை வளர்த்துக் கொள்வதில் சபையிடம்

கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை ஈடேற்றும்பொருட்டு கமத்தொழில் காப்புறுதிக்கு முந்துரிமை வழங்கி கீழே குறிப்பிட்டவாறு பல்வேறு காப்புறுதித் திட்டங்கள் 2014 ஆம் ஆண்டிலும் எம்மால் அமுலாக்கப்பட்டன.

**அமுலாக்கப்பட்ட காப்புறுதிச் செயற்றிட்டங்கள்**

1. **பயிர்க்காப்புறுதித் திட்டங்கள்**

- ✓ நெற்பயிர்க் காப்புறுதித் திட்டம்
- ✓ சோளப் பயிர்க் காப்புறுதித் திட்டம்
- ✓ மேலதிகப் பயிர்ச் செய்கை (பயறு, நிலக்கடலை, சோயா, உழுந்து) காப்புறுதித் திட்டம்
- ✓ பெரிய வெங்காயப் பயிர்க் காப்புறுதித் திட்டம்
- ✓ கரும்புச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை (தேயிலை) காப்புறுதித் திட்டம்
- ✓ தெங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ உருளைக் கிழங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ மலர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ இஞ்சி செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ மிளகாய் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ மரக்கறிச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ வாழைச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ✓ பழச் செய்கைக் காப்புறுதித் திட்டம்

2-களஞ்சியக் காப்புறுதித் திட்டம்

3-டிரெக்டர் உள்ளிட்ட விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம்

4-கால்நடைக் காப்புறுதித் திட்டம்

- ✓ ஆடுகள் காப்புறுதித் திட்டம்
- ✓ மாடுகள் காப்புறுதித் திட்டம்

5-திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

6-சுவசெத சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

இந்த காப்புறுதி செயற்றிட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருவதோடு மேற்படி செயற்றிட்டங்களை கமக்காரர்கள் மத்தியில் மென்மேலும் பிரபல்யப்படுத்துவதற்காகவும்

விரிவாக்குவதற்காகவும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நெறிப்படுத்தல் பிரிவினால் அமுலாக்கப்பட்டன.

**சந்தைப்படுத்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள்**

1. இரண்டு வருட காலமாக கமக்காரர் ஓய்வூதியம் செலுத்தும் பணிகள் இடைநிறுத்தபட்டிருந்தமையால் சபை மீது அதிருப்தி நிலையில் இருந்த கமக்காரர்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டி வளர்ப்பதற்காக 2014 சனவரி மாதத்தில் இருந்து ஓய்வூதியம் செலுத்துதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமையால் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்கான பல பிரச்சாரக் கூட்டங்கள் நாடு பூராவிலும் நடத்தப்பட்டன. 2014/01/18 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாகம் றுஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு சனாதிபதியவர்களின் தலைமையிலும் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்து வருகைதந்த பெருந்திரளான கமக்காரர்களின் பங்கேற்புடனும் ஓய்வூதியம் செலுத்தும் ஆரம்ப வைபவம் நடத்தப்பட்டதோடு, அதன் பின்னர் வடக்கு கிழக்கு மாவட்டங்களையும் உள்ளிட்டதாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கத்தக்கதாக 43 பிரதான வைபவங்களும் பிரதேச மட்டத்திலான பெருந்தொகையான வைபவங்களும் நெறிப்படுத்தல் பிரிவின் நெறிப்படுத்தலின் கீழும் மாவட்டப் பதவியணியின் ஏற்பாட்டின் கீழும் நடத்தப்பட்டன. சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரசியல் தலைமைகள் மற்றும் உத்தயோகத்தர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட இந்த வைபவங்களின்போது அப்போதைக்கு ஓய்வூதியம் பெற உரிமை பெற்றிருந்த 128,600 பேருக்கு ஓய்வூதியத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டதோடு அங்கு சபையின் செயற்றிட்டங்கள் பற்றி வௌிவாரி உத்தியோகத்தர்களினதும் கமக்காரர்களினதும் பாராட்டுக்களையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்திக்கொள்ள இயலுமாயிற்று.

2. அநுராதபுரம் ஜய ஸ்ரீ மஹா போதி அருகாமையில் மரபுரீதியாக நடத்தப்படுகின்ற புத்தரிசி விழா 2014/04/02 ஆந் திகதி நடத்தப்பட்டதோடு அங்கு பிரித் மண்டபத்தை நிர்மாணித்தல், ஒலிபெருக்கி வசதிகளை வழங்குதல், பிரித் பாராயணத்திற்கு பிக்குமார்களை அழைத்துவரல், நால்வகை மதுரங்களைப் படைத்தல் மற்றும் அடுத்த தினம் புலரும் வரை பிக்குமார்களுக்கான அனைத்துவிதமான பணிவிடைகளையும் செய்தல் சபையின் அனுசரணையுடனும் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக பொலொன்னறுவை மாவட்டத்தின்

புத்தரிசி விழா நிகழ்கால சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2014/04/06 ஆந் திகதி வரலாற்றுச் சிறப்புமிக்க கல்விகாரையில் நடைபெற்றதோடு அதன் பொருட்டும் சபையின் நிதிசார் அனுசரணை வழங்கப்பட்டது.

3. 2013/14 பெரும்போகத்தில் பயிர்ச்சேதம் ஏற்பட்ட கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்தும் இரண்டு வைபவங்கள் கௌரவ அமைச்சர்களின் தலைமையில் 2014/06/07 ஆந் திகதி அநுராதபுரத்திலும் 2014/06/22 ஆந் திகதி மட்டக்களப்பிலும் நடைபெற்றன. அதற்கு மேலதிகமாக கமக்காரர்களை மிகவும் நெருங்கும் நோக்கத்துடன் 2013/14 பெரும்போகத்திலும் 2014 சிறு போகத்திலும் பயிர்க் காப்புறுதி இழப்பீடு செலுத்தும் பிரதேசரீதியான நிகழ்ச்சிகள் சபையின் தலைவரினதும் பணிப்பாளர் நாயகத்தினதும் தலைமையில் 2014/06/23 ஆந் திகதி அம்பாறை மாவட்டத்தின் பாணம விகாரையிலும் 2014/07/09 ஆந் திகதி மன்னார் மாவட்டத்தின் பரப்புக்கடந்தான் சனசமூக நிலையம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகத்திலும் 2014/07/09 ஆந் திகதி யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்திலும் 2014/07/14 ஆந் திகதி மொணறாகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ கலாசார நிலையத்திலும் மாளிகாவில நியதெல்ல மகாவித்தியாலயத்திலும் 2014/09/11 ஆந் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்திலும் வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாவட்டச் செயலகத்திலும் 2014/12/09 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவில சமகிபுர மகாவித்தியாலயத்திலும் நடத்தப்பட்டன.

4. 2014 ஆம் ஆண்டில் நாட்டின் பிரதான விவசாய மாவட்டங்களில் நிலவிய கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான மக்கள் இச்சபையின் பிரதானமான சேவைபெறுனர்களாக விளங்கியமையால் அவர்களுக்கு ஆற்றுகின்ற சமூக நற்பணி என்ற வகையில் சபையிடமிருந்து கிடைத்த ரூ. 200,000/= நிதிசார் அனுசரணையைக் கொண்டும் சபை உத்தியோகத்தர்களின் தியாகசிந்தைமிக்க பங்களிப்புடனும் பொலொன்னறுவை மாவட்டத்தின் வெலிகந்த பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தைச் சேர்ந்த திம்புலான மகாவலி அலகின் 334 விவசாயக் குடும்பங்களுக்கு ரூ. 1,000/= பெறுமதியான உலர் உணவுப் பொதியொன்று வீதம் வழங்கும் நிகழ்வு 2014/09/10 ஆந் திகதி சபையின் தலைவரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

5. கமத்தொழில் அமைச்சினால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற "தேசிய கமக்காரர் வாரம்" கண்காட்சி 2014/09/09 தொடக்கம் 14 ஆந் திகதி வரை மாத்தறை மாவட்டத்தின் தெலிஜ்ஜவில கமத்தொழில் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டதோடு அங்கு சபையின் செயற்பாடுகள்மற்றும் சேவைகளைப் பிரதிபலிக்கின்ற கண்காட்சிக் கூடமொன்றை பேணிவரவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக சபையின் சேவைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

6. ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டத்தை விரிவாக்குவதற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்க உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைத்த சேவையைப் பாராட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்காகவும் 2013 ஆம் ஆண்டில் மிகவும் கூடிய பயிர்ச்செய்கை நிலங்களை காப்புறுதிக்காக ஆற்றுப்படுத்திய மாத்தறை மாவட்டத்தின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை உரித்தாக்கிக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு முறையே ரூ. 5,000/=, ரூ. 3,000/= மற்றும் ரூ. 2.000/= வீதம் ரொக்கப் பரிசினையும் சேவையைப் பாராட்டுவதற்கான சான்றிதழ்களை வழங்குதலும் மாத்தறையில் நடைபெற்ற கமக்காரர் வார வைபவத்தில் நடைபெற்றது.

7. சபையின் சேவைகளை விரிவாக்குகையில் வெளிவாரி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிடமிருந்தும் விசேடமாக பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகளின்போது அரச வங்கிகளின் அலுவலர்களிடமிருந்தும் கிடைக்கின்ற ஒத்துழைப்பினை விருத்திசெய்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் மாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்குப் பொறுப்பான நிறைவேற்று உத்தியோகத்தர்களினதும் கிளை முகாமையாளர்களை உள்ளிட்ட ஏற்புடைய உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் 2014/10/10 அந் திகதி பதுளையிலும் 2014/11/08 ஆந் திகதி அநுராதபுரம் கலாவெவவிலும் 2014/12/12 ஆந் திகதி பொலொன்னறுவையிலும் சுமுகமான ஒன்றுகூடல்கள் நடத்தப்பட்டதோடு கண்டி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் 2014/09/06 ஆந் திகதி தொலுவ பிரதேச செயலக கிரிக்கெற் அணிக்கும் இடையிலான சுமுகமான கிரிக்கெற் போட்டியொன்று கண்டி தங்கொல்ல விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது.

8. மாவட்ட மட்டத்தில் நடத்தப்படுகின்ற விசேட பிரச்சார மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவசியமான சுவரொட்டிகள், பெனர்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மாவட்ட அலுவலகங்கள் மூலமாக தயாரித்துக்கொள்ளப்படுவதற்கான அலுவல்கள் ஈடேற்றப்பட்டுள்ளதோடு களுத்துறை, கேகாலை, பொலொன்னறுவையை உள்ளிட்ட சில மாவட்டங்களிலிருந்து கிடைத்த கோரிக்கைகளுக்கிணங்க சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளை நெறிப்படுத்தல் பிரிவினால் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9. கைவிடப்பட்ட வயல்களை சாகுபடி செய்வதற்காக கமநல சேவைகள் திணைக்களத்தினால் அமுலாக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014/10/14 ஆந் திகதி கேகாலை மாவட்டத்தின் மொறகம்மன வயல்வெளியில் நடைபெற்ற வைபவத்தில் சபையின் பிரச்சார பெனர்களை காட்சிப்படுத்துதல் மற்றும் துண்டுப்பிரசுரங்களை பகிர்ந்தளித்தலும் சபையின் செயற்றிட்டங்களின் கீழான நன்மைகளை கமக்காரர்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக பிறவுன்ஸ் கம்பெனியுடன் கூட்டாக டிரெக்டர் காப்புறுதிசெய்தல் வேலைத்திட்டமொன்றும் அமுலாக்கப்பட்டது.

10. சபையின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக்கு தோள்கொடுக்கும் வகையிலான ஊக்குவிப்புத் திட்மொன்றை தயாரிப்பதற்கும் கமக்காரர் ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர்களின் தரவுகளை சேகரிப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரிப்பதற்குமான செயலமர்வொன்று 2014/10/14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் இரத்தினபுரி கிரிஎல்ல விஜய றிசோட் ஹோட்டலிலும் 2015 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் , வரவு செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் தாபனஞ்சார் நடவடிக்கை முறைகளை தயாரித்தல் பற்றிய செயலமர்வொன்று 2014/09/15 மற்றும் 16 ஆந் திகதிகளில் பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திலும் தலைமையக நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

11. சபையின் செயற்றிட்டங்கள் தொடர்பில் கிராமிய கமக்காரர்களின் கவனத்தை ஈர்த்துக்கொள்வதற்கான கவர்ச்சிகரமான பிரச்சார ஊடகமென்ற வகையில் புகழ்பெற்ற நடிகர்களின் பங்கேற்புடன் 18 தெருக்கூத்துக் கண்காட்சிகள் 2014 திசெம்பர் மாதத்தில்

அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நடத்தப்பட்டன. அதற்காக செலவாகிய ரூ. 200,000/= செலவுக்கான அனுசரணை ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கியால் வழங்கப்பட்டது.

12. 2014/11/02 ஆந் திகதி கமநல சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கன வயல்வெளியில் நடைபெற்ற 2014/15 பெரும்போகத்திற்கான தேசிய ஏர்பூட்டு விழாவில் பங்கேற்ற அமைச்சர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் கமக்காரர்களுக்கும் அணிவதற்கான சபையின் பெயர் அச்சிடப்பட்ட 50 பெனியன்கள் சபையின் நிதி அனுசரணையின் கீழ் வழங்கப்பட்டன.

13. 2013 ஓகத்து மாதத்தில் இருந்து 2014 சனவரி 31 வரை நாடளாவியரீதியில் அமுலாக்கப்பட்ட கால்நடைக்காப்புறுதி சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் உரிய இலக்கினை நிறைவேற்றிய சபையின் 16 வெளிக்கள/ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சேவையைப் பாராட்டுவதற்கான சான்றிதழ்களும் முறையே முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற கேகாலை மாவட்ட அலுவலகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. ஏ.ஜீ. சிறிசோம், திருகோணமலை மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர் திரு. ஜிஹான்கீர் மற்றும் தம்பத்தேகம அலுவலகத்தைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர் திரு. ஈ.எம். விமலரத்ன ஆகியோருக்கு பெறுமதிமிக்க தொலைக்காட்சிக் கருவி வீதமும் வழங்கப்பட்டதோடு முறையே முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற கேகாலை, திருகோணமலை மற்றும் தம்புத்தேகம அலுவலகங்களின் பதவியணிக்கு ரூ.10,000/=, ரூ. 8,000/= மற்றும் ரூ. 6,000/= ரொக்கப்பரிசு வழங்குதல் 2014-11-21 ஆந் திகதி மகரகம ஸ்ரீ லங்கா யூத் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற உத்தியோகத்தர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

14. சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதித் திட்டங்களை மேம்படுத்துவதற்கான விசேட சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2014- 08- 01 தொடக்கம் 2014-12-31 வரை நாடளாவியரீதியில் அமுலாக்கப்பட்டதோடு அங்கு இந்த இரண்டு செயற்றிட்டங்களின் கீழ் 2013 ஆம் ஆண்டினை விட 07 மில்லியன் ரூபா அதிகமான வருமானத்தை 2014 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொள்ள இயலுமாயிற்று.

15. வருடாந்த இலக்குகளை ஈடேற்றிக் கொள்வதிலான முன்னேற்ற மீளாய்வு மற்றும் எதிர்கால இலக்குகளை ஈடேற்றிக்கொள்ளும் வழிமுறை பற்றிய மூன்று கலந்துரையாடல்கள் பிரதான விவசாய, பகுதியளவிலான விவசாய மற்றும் விவசாயமல்லாத மாவட்டங்கள் என்றவகையில் எடுத்து ஒவ்வொரு மாவட்டத்தினதும் பிரதி/ உதவிப் பணிப்பாளர்களினதும் அதிகூடிய மூப்புநிலைகொண்ட அபிவிருத்தி / வௌிக்கள உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் 2014/09/15 ,24, 25 ஆந் திகதிகளில் தலைமையகத்தின் கூட்ட மண்டபத்தில் நடத்தப்பட்டன.

16. மானிய உரம் பெறுகின்ற கமக்காரர்களுக்காக அமுலாக்கப்படுகின்ற " கெத்தட்ட அருண – பொஹொர திரிய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காப்புறுதிச் செயற்பாடுகளை மேற்கொள்கையில் சபையின் செயற்பொறுப்பு பற்றியும் கமக்காரர் ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர் தகவல்களை சேகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் விழிப்புணர்வூட்டுவதற்கான செயலமர்வொன்று மாவட்டங்களுக்குப் பொறுப்பான அனைத்துப் பிரதி/உதவிப் பணிப்பாளர்களினதும் அனைத்து அபிவிருத்தி/ வௌிக்கள உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் 2014/11/21 ஆந் திகதி மகரகம ஸ்ரீ லங்கா யூத் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

17. கால்நடைக் காப்புறுதித் திட்டத்தை முதன்மையாகக்கொண்ட சபையின் காப்புறுதித் திட்டங்களை அமுலாக்குகையிலும் நன்மைகளைச் செலுத்தும்போதும் அவசியமாகின்ற நிழற்படங்களைப் பிடிப்பதற்காக தவணைமுறையில் செலுத்தும் அடிப்படையில் சபையின் வௌிக்களப் பதவியணிக்கு டிஜிட்டல் கெமராக்களை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

18. 2014 ஆம் ஆண்டில் நாடுபூராவிலும் நடைபெற்ற விசேட பிரச்சார மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சிகளில் Back Drop, கொடிகள், பிரச்சார பெனர், கட்அவுட் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாவும் அந்நிகழ்ச்சிகள் பற்றி இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாகவும் விரிவான பிரச்சாரத்தை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

# காப்புறுதிப் பிரிவு

## கமத்தொழில் காப்புறுதித்திட்டம்

## மற்றும்

## கால்நடைக் காப்புறுதித்திட்டம்

**காப்புறுதிப் பிரிவு**

2014 ஆம் ஆண்டிலும் இதற்கு முந்திய வருடங்களில் போல் பிரிவின் கடமைப் பணிகளை ஈடேற்றுகையில் இழப்பீட்டினை விடுத்தலுக்கு முந்துரிமை அளித்து செயலாற்றியதோடு நிகழ்கால சந்தை நிலைமைகளையும் அவதானித்து நிலவுகின்ற காப்புறுதித் திட்டங்களை இற்றைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. 2014 ஆம் ஆண்டில் பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகளின் கீழ் சபையின் பொறுப்பாக 65 மில்லியன் ரூபாவுக்கு கிட்டிய தொகையினை இழப்பீட்டுத் தொகையாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இழப்பீடு விடுவித்தலுக்கான விசேட நடமாடும் சேவைகள் இவ்வாண்டில் அமுலாக்கப்பட்டன.

2. பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகளுக்காக காப்புறுதி நிறுவனங்களுக்கிடையில் போட்டிநிலைமையை ஏற்படுத்துவதில் சந்தை வெற்றியடைந்துள்மையை இனங்காண இயலுமாயிற்று. எனவே நிலவுகின்ற காப்புறுதித் திட்டங்களின் நிபந்தனைகள் மற்றும் வாசகங்கள் சந்தை தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு திருத்தியமைக்கப்பட்டன. அத்துடன் பயிர்க்காப்புறுதி பிரேரணைப் பத்திரம் மற்றும் உரிமைகோரல் படிவத்தையும் அவசியப்பாட்டுடன் ஒத்துவரக்கூடிய வகையில் இற்றைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3. கால்நடைக் காப்புறுதியை மேற்கொள்கின்ற காப்புறுதி நிறுவனங்கள் அடிக்கடி திருத்தங்களைக் கொண்டதாக சந்தையை இயக்க முயற்சி செய்தமையால் அது தொடர்பில் கவனஞ்செலுத்தி சபையின் கால்நடைக் காப்புறுதியிலும் திருத்தங்களை சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடைக் காப்புறுதியின் கீழ் 2014 ஆம் ஆண்டு தொடர்பில் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை 4.4 மில்லியன் ரூபாவுக்கு கிட்டியதாகும்.

4. தேசிய உரச் செயலக வேலைத்திட்டத்திற்கு சமாந்திரமாக அமுலாக்கப்படுகின்ற நெற்பயிர்க் காப்புறுதி 2014/2015 பெரும் போகத்தில் இருந்து சபையின் பொறுப்பாக கையளிக்கப்பட்டதால் அதனோடு தொடர்புடைய வாடிக்கையாளர்களைப் பதிவுசெய்யவும் இழப்பீட்டினை விடுவிக்கவும் ஏற்புடைய உபாயமுறைகளை தயாரித்துக்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டன.

5. நிகழ்கால சந்தையில் அபாயநேர்வு நிலைமைகளை இனங்காண்பதற்காகவும் கமத்தொழில் காப்புறுதி நடவடிக்கைகளின்போது நிகழ்கால நடத்தைப் போக்குகளை விளங்கிக்கொள்வதற்காகவும் அனர்த்த முகமைத்துவ அமைச்சினால் 2014 செத்தெம்பர் மாதம் நடத்தப்பட்ட மூன்றுநாள் செயலமர்வில் உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்விக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

6. அத்துடன் காப்புறுதிச் சந்தையில் கமத்தொழில் காப்புறுதியின் நடத்தைப்போக்கினை இனங்காண்பதற்காக இலங்கை காப்புறுதிச் சபையினால் 2014 மே மாதம் நடத்தப்பட்ட Micro Insurance மாநாட்டுக்காக உத்துயோகத்தர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

7. பொதுக்காப்புறுதி நடவடிக்கைகளை மேலும் விருத்திசெய்வதை நோக்கமாகக்கொண்டு சபையினால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள சுவசெத மருத்துவக் காப்புறுதி மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி என்பவற்றை சந்தைப்படுத்துவதற்கான விசேட மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்று 2014 மே மாதத்தில் அமுலாக்கப்பட்டது. இதன் கீழ் ஈட்டப்பட்ட வருமானம் 3.5 மில்லியன் ரூபாவுக்கு கிட்டியதாகும்.

# காப்புறுதிப் பிரிவு

**கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு**

**நலன்புரித் திட்டம்**

**மற்றும்**

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்**

**பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

**<u>கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு, நலன்புரித் திட்டம்</u>**

கமக்காரர் ஒய்வூதியத் திட்டம் 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை எதிர்நோக்கிய நிதிசார் நெருக்கடி நிலைமையின் கீழ் ஓய்வூதியம் செலுத்துவதற்காக நிதியங்கள் கிடைக்காமையால் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஓய்வூதியம் செலுத்துதல் இடம்பெறவில்லை. எனவே இதற்கான நிரந்தர தீர்வொன்றினைப் பெற்றுக்கொடுத்து செயற்றிட்டத்தை இடையறாமல் அமுலாக்குவதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் தலைமையில் இந்த செயற்றிட்டத்தின் மறுசீரமைப்புகள் அமுலாக்கப்பட்டதோடு அதன் விளைவாக 2014 வரவு செலவு முன்மொழிவுகளின் பிரகாரம் அதிக நன்மையைக் கொண்டதாக இந்த செயற்றிட்டத்தை புதிய செயற்றிட்டமென்றவகையில் சட்டமாக்கவும் 2014 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் புதிய செயற்றிட்டத்திற்கு நேரொத்தாக அமையத்தக்கவகையில் அதிகரித்த நன்மைகளைக் கொண்டதாக ஓய்வூதியம் செலுத்துதலை மீண்டும் அமுலாக்குதல் மேற்கொள்ளப்பட்டதோடு அது ஒட்டுமொத்த கமக்காரர்களுக்காவும் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஒரு முன்னெடுப்பாகும்.

இந்த செயற்றிட்டத்தை அமுலாக்கி ஓய்வூதியத்தை இடையறாமல் செலுத்துவதற்கான நிதியமென்றவகையில் 2014 வரவு செலவு முன்மொழிவு ஊடாக 1,000 மில்லியன் ரூபா வழங்கப்பட்டதோடு அதற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டில் 1954 மில்லியன் ரூபா ஓய்வூதியம் செலுத்துவதற்காக பொதுதிறைசேரி மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தின் ஓய்வூதியம் செலுத்தம் அடிப்படை கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

| <u>வயது (வருடங்கள்)</u> | <u>மாதாந்த ஓய்வூதியம் (ரூபா)</u> |
|---|---|
| 60 – 63 | 1000/- |
| 64 – 70 | 1250/- |
| 71 – 77 | 2000/- |
| 78 மற்றும் அதற்கு மேல் | 5000/- |

அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டின் திசெம்பர்வரை 123,768 உதவுதொகை செலுத்துனர்களுக்காக 2098 மில்லியன் ரூபா ஓய்வூதியமாக செலுத்தப்பட்டுள்ளது. (குறிப்பு 01)

**<u>இறப்பு ஏலாமை நன்மைகளைச் செலுத்துதல்.</u>**

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த பின்னர் இறந்த மற்றும் ஏலாமை நிலையுற்ற உதவுதொகை செலுத்துனர்களுக்கான இறப்பு பணிக்கொடையாக ரூ. 6,185,192/= பணததொகையும் ஏலாமை நன்மைக் கொடுப்பனவாக ரூ. 242,027 பணத்தொகையும் 2014 ஆம் ஆண்டில் உதவுதொகை செலுத்துனர்களுக்கு செலுத்துனர்களுக்கு செலுத்த அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (குறிப்பு 02)

## புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளீர்ப்பதற்கான மதிப்பாய்வு.

இந்த திட்டத்தின் உறுப்பாண்மையைப் பெற்றுள்ள உதவுதொகை செலுத்துனர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் நாடளாவிய மதிப்பாய்வொன்று கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவியைப் பெற்று மேற்கொள்ளும் பணிகள் 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்பட்டது. இத்தகவல்களை அடிப்படையாகக்கொண்டு எதிர்காலத்தில் அமுலாக்க உத்தேசித்துள்ள புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்காக உதவுதொகை செலுத்துனர்களை உள்ளீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் உறுப்பாண்மை பெற்றிருந்த மொத்த கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 68,738 ஆக அமைந்ததோடு 2,913 ஓய்வூதியம் பெறுனர்களுக்காக 42.6 மில்லியன் ரூபா பணத்தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது. (குறிப்பு 03, 04)

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு சமாந்திரமாக அமுலாக்கப்படுகின்றது. எனவே கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தைப் போன்றே கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தினதும் நிதியம் எதிர்வரும் 05 வருடங்களில் தீர்ந்துவிடும்.ஆகவே இந்த செயற்றிட்டம் தொடர்பிலும் அவசியமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## இறப்பு பணிக்கொடை செலுத்துதல்.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்ட உதவுதொகை செலுத்துனர்கள் மத்தியில் இறந்த 37 உதவுதொகை செலுத்துனர்களுக்காக ரூ. 454,000 இறப்பு பணிக்கொடையாக செலுத்தப்பட்டுள்ளது. (குறிப்பு 05)

**கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் -2014** **குறிப்பு-1**

| | மாவட்டம் | ஓய்வூதியம் பெறுனர் எண்ணிக்கை | செலுத்திய ஓய்வூதியம் ரூபா. |
|---|---|---|---|
| 1 | அம்பாந்தோட்டை | 6,379 | 105,781,456 |
| 2 | இரத்தினபுரி | 5,565 | 94,906,875 |
| 3 | யாழ்ப்பாணம் | 1,968 | 34,966,040 |
| 4 | வவுனியா | 325 | 5,638,400 |
| 5 | மன்னார் | 68 | 1,007,353 |
| 6 | முல்லைத்தீவு | 74 | 1,337,283 |
| 7 | களுத்துறை | 7,542 | 129,462,540 |
| 8 | காலி | 11,461 | 207,817,385 |
| 9 | கொழும்பு | 4,692 | 80,111,898 |
| 10 | மாத்தறை | 8,101 | 137,180,076 |
| 11 | மாத்தளை | 3,606 | 59,111,563 |
| 12 | அம்பாறை | 3,348 | 56,517,238 |
| 13 | மொனறாகலை | 3,964 | 66,285,326 |
| 14 | மட்டக்களப்பு/கிளிநொச்சி | 858 | 14,536,607 |
| 15 | திருகோணமலை | 707 | 11,867,571 |
| 16 | கண்டி | 11,406 | 198,636,010 |
| 17 | கேகாலை | 7,296 | 120,478,914 |
| 18 | அநுராதபுரம் | 5,877 | 95,859,966 |
| 19 | பதுளை | 5,347 | 90,936,874 |
| 20 | நுவரெலியா | 3,382 | 57,972,298 |
| 21 | புத்தளம் | 4,297 | 69,182,893 |
| 22 | கம்பஹா | 9,436 | 157,375,203 |
| 23 | குருநாகல் | 13,969 | 231,029,325 |
| 24 | பொலொன்னறுவை | 4,100 | 70,385,558 |
| | **கூட்டுத்தொகை** | **123,378** | **2,098,384,652.00** |

**இறப்பு மற்றும் ஏலாமை நன்மைகள் 2014**

| | மாவட்டம் | இறப்புக் களின் எண்ணிக்கை | செலுத்திய தொகை ரூ. | ஏலாமை நிலையுற்றோர் எண்ணிக்கை | செலுத்திய தொகை ரூ. | ஆட்களின் மொத்தம் | கூட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காலி | 10 | 225015.00 | 2 | 74801.00 | 12 | 299816.00 |
| 2 | கொழும்பு | 3 | 72618.00 | 1 | 36441.00 | 4 | 109059.00 |
| 3 | மட்டக்களப்பு | 1 | 26,776.00 | | | | 26,776.00 |
| 4 | அம்பாந்தோட்டை | 21 | 457,157.00 | | | 21 | 457,157.00 |
| 5 | களுத்துறை | 13 | 252,500.00 | 1 | 22958.00 | 14 | 275,458.00 |
| 6 | மாத்தறை | 17 | 308,723.00 | | | 17 | 308,723.00 |
| 7 | மொனறாகலை | 26 | 588,673.00 | 2 | 49,899.00 | 28 | 638,572.00 |
| 8 | எம்பிலிபிட்டிய | 5 | 112,790.00 | | | 5 | 112,790.00 |
| 9 | கம்பஹா | 11 | 242,394.00 | | | 11 | 242,394.00 |
| 10 | மன்னம்பிட்டி | 5 | 352,651.00 | | | 5 | 352,651.00 |
| 11 | அம்பாறை | 15 | 287,315.00 | | | 15 | 287,315.00 |
| 12 | இரத்தினபுரி | 15 | 299,448.00 | | | 15 | 299,448.00 |
| 13 | பதுளை | 11 | 223,159.00 | | | 11 | 223,159.00 |
| 14 | கேகாலை | 10 | 208,685.00 | | | 10 | 208,685.00 |
| 15 | மாஹோ | 11 | 217,018.00 | | | 11 | 217,018.00 |
| 16 | மாத்தளை | 9 | 212,983.00 | 1 | 23,338.00 | 10 | 236,321.00 |
| 17 | மன்னார் | 1 | 28,099.00 | | | 1 | 28,099.00 |
| 18 | நுவரெலியா | 4 | 65,929.00 | | | 4 | 65,929.00 |
| 19 | கண்டி | 12 | 207,265.00 | | | 12 | 207,265.00 |
| 20 | புத்தளம் | 18 | 425,129.00 | | | 18 | 425,129.00 |
| 21 | குருநாகல் | 9 | 192,682.00 | | | 9 | 192,682.00 |
| 22 | யாழ்ப்பாணம் | 14 | 310,284.00 | | | 14 | 310,284.00 |
| 23 | அநுராதபுரம் | 16 | 329,637.00 | | | 16 | 329,637.00 |
| 24 | தம்புத்தேகம | 7 | 180,288.00 | | | 7 | 180,288.00 |
| 25 | மகாவலி ஜீ | 2 | 40,096.00 | | | 2 | 40,096.00 |
| 26 | பொலொன்னறுவை | 9 | 167,295.00 | 1 | 34,590.00 | 10 | 201,885.00 |
| 27 | திருகோணமலை | 6 | 124,589.00 | | | 6 | 124,589.00 |
| 28 | முல்லைத்தீவு | 1 | 25,994.00 | | | 1 | 25,994.00 |
| | கூட்டுத் தொகை | 282 | 6,185,192.00 | 8 | 242,027.00 | 290 | 6,427,219.00 |

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**31.12.2014 இல் உள்ளவாறான சேர்த்துக்கொள்ளல்**

| **மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு** | **வயதுப்பிரிவுக்கிணங்க உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை** | | | | | | **கடந்த மாத்தில் உள்ளவாறான உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கைT** | **உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை - 2013** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **18-29** | **30-35** | **36-45** | **46-50** | **51-54** | **55-59** | | |
| களுத்துறை | 1213 | 721 | 772 | 197 | 105 | 59 | 3067 | 3067 |
| காலி | 1082 | 676 | 840 | 221 | 118 | 95 | 3032 | 3032 |
| மஹாவெவ | 3253 | 1701 | 2036 | 612 | 256 | 240 | 8098 | 8098 |
| மாத்தறை | 1747 | 973 | 1226 | 346 | 197 | 164 | 4653 | 4653 |
| கொழும்பு | 576 | 360 | 478 | 140 | 63 | 38 | 1655 | 1655 |
| தங்காலை | 2511 | 1387 | 1626 | 410 | 199 | 166 | 6299 | 6299 |
| புத்தளம் | 2167 | 1156 | 1222 | 255 | 107 | 61 | 4968 | 4968 |
| நீர்கொழும்பு | 2538 | 1598 | 2163 | 734 | 417 | 377 | 7827 | 7827 |
| மட்டக்களப்பு | 2248 | 1390 | 1630 | 556 | 267 | 264 | 6354 | 6355 |
| திருகோணமலை | 654 | 516 | 550 | 129 | 81 | 78 | 2008 | 2008 |
| மன்னார் | 2050 | 1219 | 1322 | 421 | 213 | 241 | 5463 | 5466 |
| கல்முனை | 1565 | 1109 | 1515 | 479 | 243 | 206 | 5117 | 5117 |
| முல்லைத்தீவு | 88 | 79 | 141 | 50 | 27 | 44 | 429 | 429 |
| கிளிநொச்சி | 519 | 340 | 540 | 250 | 185 | 183 | 2017 | 2017 |
| யாழ்ப்பாணம் | 2131 | 1090 | 1409 | 651 | 385 | 588 | 6253 | 6254 |
| **உள்நாட்டு நீர்நிலைகள்** | | | | | | | | **67245** |
| நுவரெலியா | 29 | 28 | 47 | 7 | 1 | 3 | 115 | 115 |
| பொலொன்னறுவை | 45 | 35 | 27 | 11 | 2 | 1 | 121 | 121 |
| இரத்தினபுரி | 27 | 15 | 9 | 1 | 3 | | 55 | 55 |
| மொனறாகலை | 17 | 14 | 10 | 1 | 1 | | 42 | 42 |
| குருநாகல் | 45 | 24 | 24 | 1 | 1 | 2 | 96 | 96 |
| அநுராதபுரம் | 169 | 81 | 84 | 17 | 7 | 5 | 363 | 363 |
| மாத்தளை | 31 | 14 | 23 | 5 | 2 | 3 | 78 | 78 |
| கண்டி | 13 | 12 | 25 | 5 | 3 | 3 | 61 | 61 |
| கேகாலை | 1 | 1 | 2 | | | | 4 | 4 |
| பதுளை | 59 | 33 | 33 | 3 | | 3 | 131 | 131 |
| வவுனியா | 59 | 33 | 41 | 15 | 4 | | 152 | 152 |
| மட்டக்களப்பு - உள்நாட்டு | 84 | 52 | 67 | 27 | 20 | 25 | 275 | 275 |
| மொத்தம் | | | | | | | | 1493 |
| **உப மொத்தம்** | **24921** | **14657** | **17862** | **5544** | **2905** | **2849** | **68733** | **68738** |

**கடற்றொழிலாளர் ஒய்வூதியம் செலுத்துதல் தொடர்பான அறிக்கை-2014**

| மாவட்ட கடற்றொழில் விவாக்கப் பிரிவு | 2014 இல் ஒய்வூதியம் செலுத்துதல் | |
|---|---|---|
| | உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை | 75 | 1,096,802.00 |
| காலி | 102 | 1,387,233.00 |
| மஹாவெவ | 282 | 3,821,013.00 |
| மாத்தறை | 267 | 3,746,532.00 |
| கொழும்பு | 48 | 595,380.00 |
| தங்காலை | 180 | 2,586,790.00 |
| புத்தளம் | 42 | 619,213.00 |
| நீர்கொழும்பு | 458 | 6,109,385.00 |
| மட்டக்களப்பு | 292 | 4,291,282.00 |
| திருகோணமலை | 74 | 1,186,390.00 |
| மன்னார் | 268 | 3,819,424.00 |
| கல்முனை | 261 | 3,669,731.00 |
| முல்லைத்தீவு | 6 | 178,596.00 |
| கிளிநொச்சி | 122 | 2,991,668.00 |
| யாழ்ப்பாணம் | 390 | 5,908,026.00 |
| **உள்நாட்டு நீர்நிலைகள்** | | |
| நுவரெலியா | 8 | 101,004.00 |
| பொலொன்னறுவை | 2 | 27,000.00 |
| இரத்தினபுரி | 1 | 14,196.00 |
| மொனறாகலை | - | |
| குருநாகல் | 1 | 14,004.00 |
| அநுராதபுரம் | 2 | 24,000.00 |
| மாத்தளை | 4 | 52,476.00 |
| கண்டி | 7 | 84,399.00 |
| கோலை | - | |
| பதுளை | 3 | 36,660.00 |
| வவுனியா | - | 5,085.00 |
| மட்டக்களப்பு - உள்நாட்டு | 18 | 234,747.00 |
| **மொத்தம்** | **2913** | **42,600,976.00** |

### கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

### 2014 ஆம் ஆண்டில் இறப்பு /ஏலாமை நன்மை செலுத்துதல்

| மாவட்ட கடற்றொழில் விவாக்கப் பிரிவு | 2014 இல் இறப்பு /ஏலாமை நன்மை செலுத்துதல் | |
|---|---|---|
| | உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை | 1 | 15,000.00 |
| காலி | | |
| மஹாவெவ | 3 | 33,000.00 |
| மாத்தறை | 1 | 15,000.00 |
| கொழும்பு | 1 | 8,000.00 |
| தங்காலை | | |
| புத்தளம் | | |
| நீர்கொழும்பு | 2 | 16,000.00 |
| மட்டக்களப்பு | 2 | 16,000.00 |
| திருகோணமலை | 1 | 10,000.00 |
| மன்னார் | 4 | 56,000.00 |
| கல்முனை | | |
| முல்லைத்தீவு | | |
| கிளிநொச்சி | 15 | 194,000.00 |
| யாழ்ப்பாணம் | 7 | 91,000.00 |
| **உள்நாட்டு நீர்நிலைகள்** | | |
| நுவரெலியா | | |
| பொலொன்னறுவை | | |
| இரத்தினபுரி | | |
| மொனறாகலை | | |
| குருநாகல் | | |
| அநுராதபுரம் | | |
| மாத்தளை | | |
| கண்டி | | |
| கேகாலை | | |
| பதுளை | | |
| வவுனியா | | |
| மட்டக்களப்பு - உள்நாட்டு | | |
| **மொத்தம்** | **37** | **454,000.00** |

# நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு

<u>நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு</u>

<u>பதவியணி</u>

2014.12.31 ஆந் திகதியில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் அங்கீகரித்த பதவியணி கீழே காட்டப்பட்டவாறு அமைந்தது.

<u>பதவியணியின் உள்ளடக்கம்</u>

| சேவைப் பிரிவு | பதவிப் பெயர் | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளோர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| சிரேட்ட முகாமைத்துவம் | | | | |
| HM | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | - |
| HM | பணிப்பாளர் | 5 | 1 | 4 |
| முகாமைத்துவம் | | | | |
| MM | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 45 | 34 | 11 |
| கனிட்ட முகாமைத்துவம் | | | | |
| JM | நிர்வாக உத்தியோகத்தர் | 2 | 1 | 1 |
| | முறைமைக் கட்டுப்பாட்டாளர் | 1 | - | 1 |
| | நிதி உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| | திட்டமிடல் உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| இணை உத்தியோகத்தர் | | | | |
| ASS.O | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 55 | 33 | 22 |
| | வழங்கல் உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | | | | |
| MA - Tech | போக்குவரத்து உதவியாளர் | 1 | 1 | - |
| | செயலாளர் | 1 | 1 | - |
| | புத்தகம் பதியுனர் | 4 | 1 | 3 |
| | மென் பொருள்/ வன் பொருள் தொழில்நுட்ப வினைஞர் | 1 | 1 | - |
| | தொழில்நுட்ப வினைஞர் (கட்புல/ செவிப்புல) | 1 | - | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) | | | | |
| MA - NonTech | முகாமைத்துவ உதவியாளர் | 220 | 164 | 56 |
| ஆரம்ப (வினைஞர்) | | | | |
| PL - Skilled | சாரதிகள் | 38 | 24 | 14 |
| ஆரம்ப (வினைஞர் அல்லாத) | | | | |
| PL - Non Skilled | அலுவலக உதவியாளர் | 42 | 32 | 10 |
| | | **421** | **296** | **125** |

மேலே குறிப்பிட்ட 125 வெற்றிடங்களில் 114 பதவி வெற்றிடங்களுக்காக 2014.09.29 மற்றும் 30 ஆம் திகதிகளில் பகிரங்க செய்தித்தாள் அறிவித்தல்கள் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டதோடு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து ஆட்சேர்ப்பு நடைமுறை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த சனாதிபதி தேர்தல் காரணமாக ஏற்புடைய காலப்பகுதியில் ஆட்சேர்ப்பு செயற்பாடு இடைநிறுத்தப்பட்டிருந்தது.

**ஊழியர் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள்**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிலவுகின்ற வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தின் மூலமாக 2014.03.24 ஆந் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட "பதவியணி சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துதல்" பற்றிய பயிற்சி செயலமர்வுக்காக இச்சபையின் பிரதிப் பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு) திரு. ஐ.ஜே.ஏ. தர்மவர்தன மற்றும் பிரதிப்பணிப்பாளர் (நிதி) திரு.ஐ.யூ.கே. களுஆரச்சி ஆகியோர் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர். மேலும் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கு சொந்தமான நிர்மாண இயந்திரசாதன பயிற்சி நிலையம் 2014.04.03 மற்றும் 04 ஆந் திகதிகளில் ஏற்பாடு செய்த போக்குவரத்து முகாமைத்துவம் பற்றிய இரண்டு நாள் செயலமர்வில் பதிற்கடமையாற்றும் போக்குவரத்து உதவியாளர் திரு. ரஞ்சித் சமரநாயக்க பங்கேற்றார். 2014.07.18 மற்றும் 2014.07.19 ஆகிய இரண்டு நாட்களாக கொழும்பு 05, கிருலப்பனை "ஒழுக்க முகாடைமத்துவ கேந்திரம்" நெறிப்படுத்திய "ஒழுங்கமைந்த ஒழுக்கக் கட்டுப்பாடு மூலமாக மனித வளத்தை விருத்திசெய்வதற்கான" இரண்டு நாள் செயலமர்வுக்காக உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. ஏ.எல்.டீ.பீ.எஸ். அம்பேபிட்டிய பங்கேற்கச் செய்விக்கப்பட்டார்.

மேலும் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் மூலமாக நடத்தப்பட்ட 12 நாள் தமிழ்மொழிப் பயிற்சி நிகழ்ச்சியில் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி டபிள்யூ.ரீ. யூ. ரேணுகாவும் செல்வி தேஜா விஜேவிக்ரமவும் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர். 2014.10.23 ஆந் திகதி "திறன் அபிவிருத்தி நிதியம் " மூலமாக நடத்தப்பட்ட "ஊழியர் லீவும் சட்டமுறையான ஏற்பாடுகளும்" பற்றிய ஒருநாள் செயலமர்வில் நிர்வாக உத்தியோகத்தர் திரு. ஆர்.எம்.எம்.எஸ். ரத்நாயக்க பங்கேற்றார். இந்த நிறுவனத்தினால் 2014.12.22 ஆந் திகதி நடத்தப்பட்ட "காசுப்பாய்வு மற்றும் நிதி முகாமைத்துவம் " பற்றிய ஒருநாள் செயலமர்வில் உதவிப் பணிப்பாளர் (நிதி) திரு. எஸ்.கே. சுபசிங்க பங்கேற்கச் செய்விக்கப்பட்டார்.

இதற்கு மேலதிகமாக சபையின் நெறிப்படுத்தல் பிரிவின் ஏற்பாட்டில் 2014.11.21 ஆந் திகதி மகரகம இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர்கூடத்தில் புதிய கமக்காரர் ஓய்வூதிய செயற்றிட்டம் பற்றி சபையின் மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது.

**ஊழியர் நலனோம்பல்**

சபையின் ஊழியர்களுக்காக காலை, மாலை தேனீர் வழங்கும் வேலைத்திட்டமும் சுகாதாரக் காப்புறுதித் திட்டமும் முந்திய வருடத்தைப்போல் இவ்வருடத்திலும் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டது.

**பெறுகை மற்றும் போக்குவரத்து துறை**

2014 இல் தலைமையகத்தினதும் மாவட்ட அலுவலகங்களினதும் அவசியப்பாடுகளுக்காக அலுவலக சாதனங்களையும் மூலதனப் பண்டங்களையும் கொள்வனவு செய்தலைப் போன்றே காகிதாதிகள் கொள்வனவும் முந்திய ஆண்டுகளைப் போல் அலுவலகத் தேவைக்கிணங்க மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடத்தில் சபையின் வாகன ஒதுக்கத்திற்குரிய வாகனங்களின் அன்றாட திருத்தவேலைகள் மற்றும் சீர்காப்பு சேவைகளைத் தவிர்ந்த உந்தவொரு வாகனக் கொள்வனவும் இடம்பெறவில்லை.

**அலுவலக கட்டடங்கள்**

சபையின் தலைமையகம் இவ்வாண்டிலும் இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் பேணிவரப்பட்டது. சபையின் 25 பிராந்திய அலுவலகங்கள் பேணிவரப்படுவதோடு அதில் சபைக்குச் சொந்தமான கட்டடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். எனைய கட்டடங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் அரச மற்றும் தனியார் கட்டடங்களில் தொடர்ந்தும் பேணிவரப்படுகின்றன.

**ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

சபையினாலும் சபைக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டில் செயற்பாடு கீழே காட்டப்பட்டவாறு அமைந்தது.

1. எழுதுனர் திரு. கே.ஏ. சுதத் பண்டாரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள B/520/03 வழக்கும் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. கே.ஏ. ஹீன்பண்டாரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த B/2171/2 வழக்கும் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

2. கண்டி மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றுள்ள கமக்காரர் ஓய்வூதிய தவணைப்பண மோசடி சம்பவம் தொடர்பாக கண்டி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள B 3012/ வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

3. சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள திரு. ஏ.கே.எம். இல்லியாஸ் தாக்கல் செய்துள்ள 23/ஷ/6833/98 வழக்கின் மேன்முறையீட்டு மனு குருநாகல் சிவில் மேன்முறையீட்டு மேல்

நீதிமன்றத்தில் முறைப்பாட்டாளருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்படுள்ளது. இந்த வழக்குத் தீர்ப்புக்கு எதிராக சபை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு சமர்ப்பித்துள்ளது. முறைப்பாட்டாளர் தரப்பிலும் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

4. சபையினால் இலங்கை வங்கிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 21843,21844 மற்றும் 21845 இலக்கமுடைய வழக்குகளின் ஒருங்கிணைந்த கட்டளைக்கு எதிராக இலங்கை வங்கி தாக்கல் செய்துள்ள WP/HCCA/Col 312/2003 (f) இலக்கமுடைய மேன்முறையீட்டு மனு சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

5. செல்வி மஹேஷிதிலினி புத்திகா பயிற்சியை நிறைவுசெய்தல் சம்பந்தமாக சபைக்கு எதிராக எம்பிலிபிட்டிய தொழில் நியாய மன்றத்தில் தாக்கல் செய்துள்ள 6ඊ/7030/1/1 இலக்கமுடைய வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

6. திரு.டெரன்ஸ் வருஷவிதான சபைக்கு எதிராக பதுளை தொழில் நியாய மன்றத்தில் தாக்கல் செய்துள்ள 05/20356/2013 இலக்கமுடைய வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

7. திரு. கே.எச.எஸ். சஞ்சீவ சபைக்கு எதிராக மகரகம தொழில் நியாய மன்றத்தில் தாக்கல் செய்திருந்த 33/1124/2013 இலக்க வழக்குடன் தொடர்புடைய விண்ணப்பம் காலவிதிப்பு அடைந்ததன் காரணமாக நிராகரிக்கப்பட்டு வழக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

## 2014.12.31 ஆந் திகதியில் பதவியணிப் பகுப்பாய்வு

### பதவியணியின் ஆண்/ பெண் பகுப்பாய்வு

ஆண் - 186

பெண் - 110

மொத்தம் - 296




### வயதுப் பகுப்பாய்வு

| வயதுப் பகுப்பாய்வு | ஊழியர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 56 - 60 | 28 | 9% |
| 51 - 55 | 76 | 26% |
| 46 - 50 | 44 | 15% |
| 41 - 45 | 39 | 13% |
| 36 - 40 | 52 | 18% |
| 31 - 35 | 46 | 15% |
| 30 விடக் குறைவான | 11 | 4% |
| மொத்தம் | 296 | 100% |




### சேவைக் காலத்திற்கிணங்க பகுப்பாய்வு

| வருடம் | ஊழியர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 30 ற்கு மேல் | 13 | 2% |
| 26 - 30 | 76 | 14% |
| 21 - 25 | 37 | 23% |
| 16 - 20 | 17 | 8% |
| 15 விடக் குறைவான | 153 | 53% |
| மொத்தம் | 296 | 100 |




### 2014 ஆம் அண்டில் இளைப்பாறுதலும் சேவையிலிருந்து நீங்குதலும்

ஆண் - 03

பெண் - 03

மொத்தம் - 06

### 2014 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பும் பதவி உயர்வும்

1. வெளிவாரி ஆட்சேர்ப்பு - 02
2. உள்வாரி ஆட்சேர்ப்பு - 05
3. ஏஸஜ் வீ®பதவி உயர்வு - 06

# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

<u>**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**</u>

2014 ஆம் ஆண்டுக்காக சபையினால் அமுலாக்கப்படுகின்ற செயற்றிட்டங்களுக்காக அந்தந்த பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் வாரியாக தயாரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டன.

அதற்கிணங்க சபையினால் அமுலாக்கப்படுகின்ற செயற்றிட்டங்களுக்காக தலைமையக மற்றும் மாவட்ட அலுவலக மட்டத்தில் இப்பிரிவின் மட்டுப்படுத்தப்பட்ட மனித வளத்தைக் கொண்டு ( பிரதிப்பணிப்பாளர், முகாமைத்துவ உதவியாளர் கணக்காய்வு , முகாமைத்துவ உதவியாளர்) 60 உள்ளக கணக்காய்வு பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அத்துடன் சபையின் அனைத்துப் பிரிவுகளினதும் மாவட்ட அலுவலகங்களினதும் நடவடிக்கைகளில் (உள்டக்கியதாக) அமுலாக்கப்டுகின்ற கட்டுப்பாட்டு முறைகள் , அவற்றின் அளவுசார்ரீதியான தன்மை மற்றும் செயற்பாடுகளை மதிப்பீடுசெய்து பின்வரும் துறைகளைச் சார்ந்ததாக உள்ளக கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்ட்டன.

நிர்வாக மற்றும் மனித வளப்பிரிவு தொடர்பாக ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, கையிருப்பு பதிவேடுகளை பேணிவருதல், கடன்தொகை விநியோகம், அறவிடப்படாத இடர்க்கடன் மீதிகளை அறவிடுதல், சம்பள ஏற்றங்களை செலுத்துதல் மற்றும் சம்பளப் படிநிலைகளில் அமர்த்துதல், மாவட்ட அலுவலக வரவு / லீவு மற்றும் அறிக்கைகளை அனுப்பிவைத்தல், முற்பணங்களை செலுத்தித் தீர்த்தல் மற்றும் மருத்துவஉதவி நன்மைகளை செலுத்துதல் பற்றிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக இறுதிக் கையிருப்பு மீதி, நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் மீதி, மேலதிகநேரப்படி செலுத்துதல், ஓட்டப் பதிவுக்குறிப்பேடுகள், வாகனப் பராமரிப்பு, நிலையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதிப்பிரிவின் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக காசேடுகள் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுகளைப் பரிசீலித்தலின் கீழ் கடன் மற்றும் முற்பணக் கணக்கு, கால்நடைக் காப்புறுதிக் கணக்கு, கமக்காரர் ஒய்வூதிய நிர்வாகக் கணக்கு, கடற்றொழிலாளர் ஒய்வூதிய சேகரித்தல் கணக்கு, கடற்றொழிலாளர் ஒய்வூதிய நிர்வாகக் கணக்கு, மேலதிகப் பயிர்ச்செய்கை காப்புறுதிக் கணக்கு, கேகாலை, பொலொன்னறுவை மற்றும் மாத்தறை மாவட்ட நிர்வாகக் கணக்குகள் பற்றிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன.

காசேடுகள் மற்றும் கொடுப்பனவு செலவுறுதிச் சீட்டுகளின் பரிசீலனையின் கீழ் கமத்தொழில் காப்புறுதி நிர்வாகக் கணக்கு, கமக்காரர் ஒய்வூதிய நிர்வாகக் கணக்கு, கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிர்வாகக் கணக்கு, மூலதனக் கணக்கு, சோளப் பயிர்க் காப்புறுதி இழப்பீட்டுக் கணக்கு மற்றும் கால்நடைக் காப்புறுதி இழப்பீட்டுக் கணக்கு என்பவை பரிசீலிக்கப்பட்டன.

அதற்கு மேலதிகமாக மீண்டெழும் செலவினங்களுக்கான ஏற்பாடுகளின் கிடைப்பனவுகள், நெற்பயிர்ச்செய்கை காப்புறுதி தவணைப்பண அறவீடுகளை அனுப்பிவைத்தல், பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் விநியோகம் மற்றும் கால்நடைக் காப்புறுதி தவணைப்பண அறவீடுகளை அனுப்பிவைத்தல் என்பவை பரிசீலிக்கப்பட்டன. மேலும் முதலீட்டு மீதிகள் பற்றி பரிசீலித்தல், இறுதிக் கையிருப்பு மீதிகள், நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதி, மூலதன ஏற்பாடுகள் மூலமாக நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், முகவர் நிறுவனங்களினால் பிந்திய தவணைகள் அறவிடப்படல், ஊழியர் கடன் விநியோகித்தல், முற்பணத்தை செலுத்தித் தீர்த்தல் மற்றும் தலைமையக சில்றைக்காசு கட்டுநிதி போன்ற பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட நிர்வாகக் கணக்கின் கீழ் கேகாலை, பொலொன்னறுவை, மாத்தறை, குருநாகல், நுவரெலியா என்பவையும் மாவட்ட அலுவலக சேகரித்தல் கணக்கின் கீழ் பொலொன்னறுவை, மாத்தளை, புத்தளம், குருநாகல், தம்புத்தேகம, கோலை, நுவரெலியா என்பவையும் பரிசீலிக்கப்பட்டன.

காப்புறுதிப் பிரிவின் நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக கால்நடைக் காப்புறுதி பிரேரணைப் பத்திரம் மற்றுத் தவணைப்பண அறவீட்டினை அனுப்பிவைத்தல், கடன்வழங்கும் நிறுவனங்களினால் காப்புறுதி செய்தல் தவணைப்பண அறவீடு அனுப்பிவைத்தல், பற்றுச்சீட்டுப் புத்தகக் கட்டுப்பாடு என்பவை பரிசீலிக்கப்பட்டன. மேலும் கால்நடைவள நன்மைகளை செலுத்துதலை பரிசீலித்தல், நெற்பயிர் காப்புறுதி இழப்பீடு செலுத்துதல் (அம்பாறை), சோளப் பயிரச்செய்கைக்கான இழப்பீடு செலுத்துதல் (அநுராதபுரம்) ஆகிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நெறிப்படுத்தல் பிரிவின் நடவடிக்கைளை உள்ளடக்கத்தக்கதாக எதிர்கால வேலைத்திட்டங்களை சமர்ப்பித்தல் மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல், இலக்குகளை நிறைவேற்றுதல், ஒட்டுமொத்த முன்னேற்றம் (செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க) பற்றி பரிசீலித்தல் என்பவை மேற்கொள்ளப்பட்டன.

ஓய்வூதியப் பிரிவுடன் தொடர்புடையதாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் ஒய்வூதியம் செலுத்துதல், உரிமை கோரப்படாத ஓய்வூதியத்தை மீளப்பெறல், தபால் நிலையங்கள் ஊடாக ஒய்வூதியம் செலுத்துதல், இறப்பு மற்றும் ஏலாமை நன்மைகளை செலுத்துதல், பிந்திய தவணைப்பணத்தை அறவிடல் (முகவர் நிறுவனங்கள் ஊடாக) கமக்காரர் ஓய்வூதிய நிர்வாகச் செலவினங்கள் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிர்வாகச் செலவினங்கள் பற்றிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட அலுவலக பரிசீலனைகளின் கீழ் கேகாலை, குருநாகல் மற்றும் தம்புத்தேகம மாவட்ட அலுவலகங்களின் பணிகள், வரவு மற்றும் லீவு, சொத்துக்கள் பதிவேடு, பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் கட்டுப்பாடு, தவணைப்பண அறவீடு மற்றும் ஓட்டப்பதிவுக் குறிப்பேடுகளை உள்ளிட்ட பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# நிதிப்பிரிவு

## நிதிசார் பொழிப்பு

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் வருமானம் 27% வளர்ச்சியைக் காட்டுகின்றது. அதாவது 2013 இல் 93.8 மில்லியன் ரூபாவாக அமைந்த கட்டுப்பண வருமானம் 2014 ஆம் ஆண்டில் 119.6 மில்லியன் ரூபா வரை வளர்ச்சி அடைந்தது. அத்துடன் இவ்வாண்டில் 68.1 மில்லியன் ரூபா இழப்பீடு செலுத்தப்பட்டதோடு செயற்றிட்டமானது 17.8 மில்லியன் ரூபா நிகர இலாபத்தையும் வெளிக்காட்டுகின்றது.

2014 ஆம் ஆண்டின் சனவரி மாதம் தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை அமுலாக்குதல் தொடங்கப்பட்டதோடு அதற்கமைவாக செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்த ஓய்வூதியம் செலுத்துதல் மீண்டும் தொடங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் ஓய்வூதிய நிதியத்தை பலப்படுத்துவதற்காக 1000 மில்லியன் ரூபா திறைசேரி முறி சபைக்கு வழங்கப்பட்டது.

# முந்திய ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள்

<u>இலாபத்தன்மை</u>

**1.** <u>கமத்தொழில் காப்புறுதித் திட்டம்</u>




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| நெறிப்படுத்தல் செலவு (மில். ரூபா) | 274.3 | 67.4 | 135.2 | 170.9 | 75.6 |
| காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் (மில். ரூபா) | 105.1 | 157.4 | 124.7 | 93.8 | 119.6 |

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்பட்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு அமைவாக காப்புறுதிச் செயற்பாடுகள் மீதுஅதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளமையால் 2007 ஆம் ஆண்டில் நிலவிய கமத்தொழில் காப்புறுதி வருமானமாக அமைந்த 27.7மில்லியன் ரூபா 2008 ஆம் ஆண்டில் 70.5 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. அந்த வேலைத்திட்டம் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டமையால் 2011 ஆம் ஆண்டில் இந்த கமத்தொழில் காப்புறுதி வருமானத்தை சாதனை படைத்த வகையில் 157 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக்கொள்ள இயலுமானதாக அமைந்த போதிலும் சபை எதிர்நோக்கிய பாரதூரமான நிலைமையின் மத்தியில் 2012 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதி வருமானம் 124.7 மில்லியன் ரூபா வரை வீழ்ச்சியடைந்ததோடு 2013 ஆம் ஆண்டில் தோன்றிய பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக கமத்தொழில் காப்புறுதி வருமானம் 93.8 மில்லியன் ரூபா வரை மேலும் வீழ்ச்சியடைந்தது. 2014 ஆம் ஆண்டில் கமத்தொழில்

காப்புறுதி வருமானமத்தை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25.8 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துக்கொள்ள இயலுமானதாக அமைந்ததோடு ,து கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 275 வளர்ச்சியாகும்.

**கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 154 | 110 | 58.1 | 38 | 147 |
| நெறிப்படுத்தல் செலவு | 1106 | 1282 | 1433 | 1693 | 2019 |

**கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

1987 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் நிதியம் 2010 ஆம் ஆண்டின் ஒகத்து மாதமளவில் பூச்சியநிலையை அண்மித்தது. இதில் தாக்கமேற்படுத்திய பிரதான விடயங்கள் மத்தியில் தவணைப்பண வருமானத்தை அதிகரிக்காமல் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை ரூ. 200 இல் இருந்து ரூ. 1,000 வரை அதிகரித்தமை, வாழ்க்கைத்துணைக்கு ஒய்வூதியம் செலுத்தியமை, உடன்பட்டவாறு அரச மானியம் கிடைக்காமை போன்றவை அமைந்தன. சபையிடமிருந்த ஏனைய நிதியங்களைப் பயன்படுத்தி 2011 ஆம் ஆண்டுவரை ஓய்வூதியம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டது.

2012 மற்றும் 2013 ஆண்டுக்காக ஒய்வூதியம் செலுத்தப்படவில்லை என்பதோடு 2014 ஆம் ஆண்டில் புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ் செய்ததோடு அவ்வாண்டுக்காக 2129 மில்லியன் ரூபா ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது.

நடப்பு ஆண்டில் 1,000 மில்லியன் ரூபா திறைசேரி முறி நிதியத்திற்கு வழங்கப்பட்டதோடு 1954.80 மில்லியன் ரூபா ஒய்வூதிய நன்மைகள் செலுத்துவதற்காக வழங்கப்பட்டது. எதிர்வரும் 3 வருடங்களுக்குள் ஓய்வூதிய நிதியத்திற்காக 5,000 மில்லியன் ரூபா பணத்தொகையினை வழங்க 2015 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

**கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| நெறிப்படுத்தல் செலவு | 25 | 28 | 32.5 | 40.5 | 45.3 |
| வருமானம் | 62 | 40 | 59.8 | 51.7 | 36.5 |

2. **கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ள கடற்றொழிலாளர்களுக்காக சபை கொண்டுள்ள பொறுப்பு ஏறக்குறைய 2.6 பில்லியன் ரூபாவாக அமைவதோடு சபையிடமுள்ள நிதியங்களைக் கொண்டு கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தை பேணிவருவதில் இற்றைவரை வெற்றிகண்டுள்ளது. எவ்வாறாயினும் நிலவுகின்ற செயற்றிட்டம் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டால் 2021 ஆம் ஆண்டளவில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியமும் பூச்சியநிலையை அண்மிக்குமென கணிப்பிடப்பட்டுள்ளது.

# 2014 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த திட்டங்களுக்குமான ஒருங்கிணைந்த நிதிசார் கூற்றுகள்

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலைமை பற்றிய ஒருங்கிணைந்த கூற்று**

| | 2014.12.31 | மீள் வெளிப்படுத்தி 2013.12.31 |
|---|---|---|
| <u>சொத்துக்கள்</u> | | |
| ***நடைமுறையல்லாச் சொத்துக்கள்*** | | |
| ஆதனம், சாதனம், பொறித்தொகுதி | 10,728,007.59 | 12,347,745.48 |
| **முதிர்ச்சி வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்** | | |
| திறைசேரி முறிகள் | 1,120,743,965.00 | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | 651,119,894.05 | 399,620,308.22 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **<u>651,119,894.00</u>** | **<u>411,968,053.70</u>** |
| **சமவுரிமைப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | |
| க.க.கா.ச. திரண்ட (பற்றாக்குறை)/மிகைநிலை | (1,766,817.31) | (20,913,143.36) |
| அரசாங்க மூலதனக் கொடை | 11318955.09 | 9,870,305.50 |
| அரசாங்கக் கொடை | 50,000,000.00 | 50,000,000.00 |
| கமக்காரர் ஓய்வூதிய நிதியம் | (57,249,428,978.77) | (53,967,472,093.39) |
| ஆயுட் காப்புறுதி நிதியம் – க.ஓ. திட்டம் | 709,386,616.19 | 647,785,238.94 |
| F.A.O கொடை | 547,885.14 | 547,885.14 |
| குழுமக் காப்புறுதிப் பங்களிப்பு | 1,000,000.00 | 1,000,000.00 |
| கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியம் | (1,930,371,414.21) | (17,116,476,10.36) |
| பதவியணி காப்புறுதி நிதியம் | 3,912,029.49 | 2,760,941.56 |
| குழுமக் காப்புறுதி நிதியம் | 21,525,809.70 | 20,210,079.70 |
| ஏனைய நிதியங்கள் | | |
| க.க.கா.ச. ஒதுக்க நிதியம் | <u>18,231,729.70</u> | <u>15,883,054.25</u> |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | 2,555,667,552.00 | 2,344,270,819.00 |
| கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்புகள் | 53,083,243,089.00 | 49,802,083,620.00 |
| கமக்காரர் ஓய்வூதிய பொறுப்புக்கள் | | - |
| திறைசேரி முறிகள் மீதான அரசாங்கக் கொடை | 1081488000.00 | 59,667,360.11 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | **56,796,303,280.81** | **52,213,924,554.27** |
| நிலவுகின்ற பொறுப்புகள் | 3,351,932,770.81 | 3157396096.34 |
| **மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புக்களும்** | **1782591866.64** | **411,968,053.70** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**
**3013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானம் பற்றிய ஒருங்கிணைந்த கூற்று**

| வருமானம் | க.க.கா.ச. | கமக்காரர் | கடற்றொழிலாளர் | 2,014 | 2013 |
|---|---|---|---|---|---|
| கட்டுப்பணம் - காப்புறுதி | 119,583,563 | | - | 119,583,563.34 | 93,854,060 |
| கடற்றொழிலாளர் ஒய்வூதிய சேர்க்கை | 2,949,291 | 50,772,350 | | 50,772,350.36 | 36,196,017 |
| வட்டி – க.க.கா.ச. | | | | 2,949,291.22 | 7,684,352 |
| வட்டி – கமக்.ஓய்.திட்டம் | | 96,620,882 | | 96,620,881.96 | 1,869,928 |
| கடற்றொழிலாளர் ஒய்வூதிய சேர்க்கை | | | 1,456,710 | 1,456,710.00 | 2,904,747 |
| வட்டி – கடற்.ஓய்.திட்டம் | | | 38,583,361 | 38,533,360.63 | 52,346,551 |
| | **122,532,855** | **147,393,232** | **39,990,071** | **309,916,157.21** | **194,855,655** |
| கழிக்க - தொழிற்பாட்டுச் செலவுகள் | | | | | |
| இழப்பீடு – க.க.கா.ச. | (68,128,515) | | | (68,128,514.69) | (166,484,278) |
| தொழிற்பாட்டுச் செலவுகள் - க.க.கா.ச. | (7,430,831) | | | (7,430,830.91) | (4,484,693) |
| ஓய்வூதியம் செலுத்துதலும் தரகுத் தொகையும் | | (1,984,434,456) | (42,356,694) | (2,026,791,150.00) | (1,691,644.554) |
| செலுத்திய குழுமக் காப்புறுதி – கமக். ஓய். பிரிவு | | (30,003,930) | | (30,003,930.00) | (33,164,640) |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் – க.ஓய். பிரிவு | | (1,307,100) | | (1,307,099.85) | (1,280,219) |
| உதவுதொகை மீளளிப்பும் தேறிய வட்டியும் | | (3,728,240) | (1,205,639) | (4,933,879.35) | (6,467,710) |
| செலுத்திய குழுமக் காப்புறுதி – கடற். ஓய்.திட்டம் | | | (1,675,730) | (1,675,730.00) | (1,691,660) |
| ஊக்குவிப்பு படி - FSH | | | (88,820) | ((88,820.00) | (152,127) |
| | **(75,559,346)** | **(2,019,473,726)** | **(45,326,883)** | **(2,140,359,954,80)** | **(1,905,369,880)** |
| **தொழிற்பாட்டு மிகை/ (பற்றாக்குறை)** | **46,973,509** | **1,872,080,494** | **(5,336,812)** | **(1,830,443,797.59)** | **(1,710,514,225)** |
| **ஓய்வூதிய பொறுப்பு அதிகரித்தமை** | | **-** | **-** | **-** | **-** |
| **அரச கொடை இலதாக்கல்** | | 612,868 | | 612,868.20 | 711,443 |
| ***சேர்க்கப்பட்டது :*** | | | | | |
| ஓய்வூதியம் செலுத்துவதற்கான அரச கொடை | | 1,954,800,000 | | 1,954,800,000.00 | - |
| நிர்வாகச் செலவுகளுக்கான அரச கொடை | 72,750,000 | 72,750,000 | 3,000,000 | 148,500,000.00 | 139,500,000 |
| நிர்வாகச் செலவுகளுக்கான கமக்காரர் பங்களிப்பு | | 2,859,210 | | 2,859,210.00 | 2033,861 |
| நிர்வாகச் செலவுகளுக்கான | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடை -FSH | | | | | |
| பிற வருமானம் | 2,082,371 | 42,801 | | 2,125,172.03 | 7,815,591 |
| | **74,832,371** | **2,030,452,011** | **3,000,000** | **2,108,284,382.03** | **149,349,452** |
| | **121,805,880** | **159,984,385** | **(2,336,812)** | **278,453,452,264** | **(1,560,453,329)** |
| **கழிக்க - செலவுகள்** | | | | | |
| நிர்வாகச் செலவுகள் | (96,111,433) | (96,940,912) | (4,832,931) | (197,885,276.42) | (173,204,570) |
| நிதிசார் மற்றும் பிற | (312,496) | (58,034,436) | (561) | (58,347,492.30) | (74,174,191) |
| | **(96,423,928)** | **(154,975,348)** | **(4,833,493)** | **(256,232,768.72)** | **(247,378,761)** |
| **தேறிய மிகை / (பற்றாக்குறை)** | **25,381,952** | **4,009,037** | **(7,170,305)** | **22,220,683.92** | **(1,807,832,090)** |
| கழிக்க :க.க.கா.நிதிய ஒதுக்கத்திற்கான ஏற்பாடுகள் | (2,348,675) | - | - | (2,348,675.45) | |
| **ஏற்பாடுகளுக்குப் பின்னரான தேறிய மிகைநிலை/(பற்றாக்குறை)** | **23,033,277** | **4,009,037** | **(7,170,305)** | **19,872,008.47** | **(1,807,832,090)** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | | |
| பணிக்கொடை இலாபம்/(நட்டம்) | (5,251,054.46) | (4,810,,552.97) | (156,766) | (10,218,373.38) | 7,377,254.89 |
| ஓய்வூதிய பொறுப்புகள் அதிகரித்தமை | | (3,281,159,469.00) | (211,396,733.00) | (3,492,,556,202.00) | (3,483,286,439.00) |
| | (5,251,054.46) | (3,285,970,021.97) | (211,553,498.95) | (3,502,774,575.38) | (3,475,909,184.11) |
| **விபரமான வருமானத்தின் தேறிய மிகைநிலை/ பற்றாக்குறை** | **17,782,222.32** | **(3,281,960,985,.38)** | **(218,723,803.85)** | **(3,482,902,566.91)** | **(5,283,741,274.12)** |

# 2014 திசெம்பர் இல் உள்ளவாறான  நிதிசார் கூற்றுகள்
# கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**

**2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி நிலைமை பற்றிய அறிக்கை**

| | | | 2014.12.31 | மறு வெளிப்படுத்துகை 2013.12.31 |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | ரூ.ச | ரூ.ச |
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | 1 | 8,446,766.95 | 10,717,738.64 |
| ஆதனம், சாதனம், பொறித்தொகுதி | | | 8,446,766.95 | 10,717,738.64 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | 2 | 934,205,588.20 | 827,514,961.87 |
| மொத்தச் சொத்துக்கள் | | | **942,652,355.15** | **838,232,700.51** |
| **உரிமைப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | |
| அரசாங்க கொடை( தொடக்க மூலதனம்) | | | 500,000,000 | 500,000,000 |
| க.க.கா.ச. திரண்ட நிதியம் | | 3 | (1,766,817.31) | (20,913,143.36) |
| அரசாங்க கொடை | | 4 | 9,038,545.41 | 8,242,037.62 |
| க.க.கா.ச. ஒதுக்க நிதியம் | | 5 | 18,231,729.70 | 15,883,054.25 |
| | | | 709,386,616.19 | 647,785,238.94 |
| | | | 3,912,029.49 | 2,760,941.56 |
| | | | 788,802,103.48 | 703,758,129.01 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | |
| கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - கடன் | | | - | 525,500.27 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | | 36,494,676.34 | 28,391,641.17 |
| | | | 36,494,676.34 | 28,917,141.44 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | 117,355,578.33 | 105557,430.06 |
| **மொத்த உரிமைப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | | 942652355.15 | 838,232,700.51 |

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டுக் கொள்கையுடன் அமைந்தொழுகுகின்றன.

..........................

நிதிப் பிரிவுத் தலைமைதிகாரி

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**
**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**
**2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானம் பற்றிய கூற்று**

| | | 2014.12.31 | மறு வெளிப்படுத்துகை<br>2013.12.31 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூ.ச | ரூ.ச |
| **வருமானம்** | | | |
| கட்டுப்பணம் - காப்புறுதி | 8.1 | 119,583,563.34 | 93854059.76 |
| **வட்டி** | 8.2 | 2,949,291.22 | 7684352.45 |
| **மொத்த வருமானம்** | | **122,532,854.56** | **101538412.21** |
| இழப்பீடு | 9.01 | (68128514.69) | (166,484,277.58) |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | 9.02 | 7,430,830.91 | (4,484,692.54) |
| | | **75,559,345.60** | **(170,968,970.12)** |
| **தொழிற்பாட்டு மிகை /(பற்றாக்குறை)** | | **46,973,508.96** | **(69,430,557.91)** |
| நிர்வாகச் செலவுகளுக்கான அரசாங்க கொடை | | 72750000.00 | 69,000,000.00 |
| பிற வருமானம் | 10 | 2,082,371.45 | 7,811,131.44 |
| | | **74,832,371.45** | **76,811,131.44** |
| | | **121,805,880.41** | **7,380,573.53** |
| நிர்வாகச் செலவுகள் | 11 | (96,111,432.68) | (89,103,139.33) |
| **நிதி மற்றும் பிற செலவுகள்** | 12 | (312,495.50) | (198,000.06) |
| **மொத்தச் செலவுகள்** | | **(96,423,928.18)** | **(89,301,139.39)** |
| **தேறிய மிகைநிலை/(பற்றாக்குறை)** | | **25,381,952.23** | **(81,920,565.86)** |
| **க.க.கா.ச. ஒதுக்க நிதியத்திற்கான ஏற்பாடுகள்** | | (2348675.45) | **-** |
| **ஏற்பாடுகளின் பின்னர் தேறிய இலாபம்/ நட்டம்** | | **23,033,276.78** | **(81,920,565.86)** |
| **விரிவான வருமானம்** | | (5251054.46) | 29890551.33 |
| **பணிக்கொடை இலாபம்/ நட்டம்** | | (5251054.46) | 29890551.33 |
| **விரிவான வருமானத்தின் பின்னர் தேறிய இலாபம்/ நட்டம்** | | **17,782,222.32** | **(78,931,514.53)** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**
**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**
**2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று**

| | மூலதனத்திற்கான அரசாங்கக் கொடை ரூ .'000 | திரண்ட பற்றாக்குறை ரூ .'000 | க.க.கா.ச. ஒதுக்க நிதியம் ரூ .'000 | ஆயுட் காப்புறுதி நிதியம் ரூ .'000 | பதவியணி மருத்துவக் காப்புறுதி நிதியம் ரூ .'000 |
|---|---|---|---|---|---|
| 2012 திசெம்பர் 31 இல் மீதி | 8,534 | 57,220 | 15,883 | 572.821 | 2.355 |
| கமக்.ஓய். திட்டத்தின் மீதி | | 798 | | | |
| கையளித்தல் | | | | 74,964 | 405 |
| சேர்க்க : முந்திய | | | | | |
| ஆண்டுக்கான சீராக்கல் | 2.,000 | | | | |
| **ஆண்டில் சேர்த்தவை:2013** | (2,292) | (78931) | | | |
| **அரசாங்கக் கொடை** | | | | | |
| கமக். ஓய். அரசாங்கக் | | | | | |
| கொடை | **8,242** | **(20,913)** | **15,883** | **647,785** | **2,760** |
| இலதாக்கல் | | | | | |
| தேறிய | | 1364 | | | |
| மிகைநிலை/(பற்றாக்குறை) | | | | | |
| ஒதுக்கத்திற்கான | | | 2,348 | 61,101 | 1,152 |
| கையளித்தல் | 3000 | | | | |
| | (2,204) | | | | |
| | | 17,782 | | | |
| **2013 திசெம்பர் 31 இல் மீதி** | **797** | **19,146** | **18,231** | **61,601** | **1152** |
| கமக்.ஓய். திட்டத்தின் மீதி கையளித்தல் | | | | | |
| சேர்க்க : முந்திய ஆண்டுக்கான சீராக்கல் | | | | | |
| ஆண்டில் சேர்த்தவை: அரசாங்கக் கொடை | | | | | |
| கமக். ஓய். அரசாங்கக் கொடை | | | | | |
| இலதாக்கல் | | | | | |
| தேறிய மிகைநிலை/(பற்றாக்குறை) | | | | | |
| **2014 திசெம்பர் 31 இல் மீதி** | **9039** | **(1,767)** | **18,231** | **709,386** | **3,912** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**
**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**
**2014 திசெம்பர் 31 இல் காசுப் பாய்வுக் கூற்று**

| | **2014.12.31**<br>**ரூ. சதம்** | **2013.12.31**<br>**ரூ. சதம்** |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து காசுப் பாய்வு** | | |
| தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை) | **17782222.32** | (81,920,565.86) |
| **சீராக்கல்** | | |
| - தேய்மானம் | 3659087.36 | 4,031,213.76 |
| - முந்திய ஆண்டுடன் தொடர்புடைய சீராக்கல் | 1364103.73 | 798,713.38 |
| க.க.கா.நி. ஒதுக்க நிதியத்திற்கான ஏற்பாடு | 2348675.45 | |
| பணிக்கொடை இலாபம்/நட்டம் | 5251054.46 | |
| | **12,622,921.00** | **4829927.14** |
| ஆதனம், சாதனம், பொறித்தொகுதி கையகற்றல் மீதான இலாபம்/ நட்டம் | **-** | (6119737.01) |
| இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 3,245,227.71 | 2,898,259.90 |
| | | |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முந்திய தொழிற்பாட்டு மிகைநிலை | **33,650,371.03** | **-80,312,115.83** |
| பட்டோலைப் பண்டங்களில் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | 240,905.03 | 76,174.08 |
| வருமதிகள் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | (61135535.69) | (60,351,603.46) |
| வருமதியான கட்டுப்பணம் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | (17,286,500.86) | 6,519,371.55 |
| வைப்புக்களும் முற்செலுத்தல்களும் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | (162,401.46) | 47,008.00 |
| முற்பணம் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | (25,783.73) | 135,677.79 |
| இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | (8,945,000.00) | 1,945,000.00 |
| அச்சிடல் நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | 32,205.00 | 74,015.00 |
| முந்திய தவணைப்பண முற்பணம் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | 20,046,920.01 | (1,186,504.88: |
| பிற சென்மதிகள்  (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | (150.000.00) | 604,800.00) |
| அட்டுறு செலவினங்கள்  (அதிகரிப்பு)/ வீழ்ச்சி | 814,023.26 | 725,900.84 |
| | **-67,052,978.50** | **-52,619,761.08** |
| **தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட பணம்** | -33,402,607.47 | -132,931.876.91 |
| இளைப்பாற்றுப் பணிக்கொடை – செலுத்தியவை | (393,250.00) | (1,092,937.50) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து  தேறிய காசுப்பாய்வு** | **-33,795,857.47** | **134,024,814.41** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து  தேறிய காசுப்பாய்வு** | | |
| மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை | 3,000,000.00 | 2,000,000.00 |

| | | |
|---|---|---|
| மருத்துவக் காப்புறுதி நிதியம் | 1,151,087.93 | 405,073.84 |
| அரசாங்கக் கொடை இலதாக்கல் | (2,203,492.21) | (2,292,693.11) |
| சொத்துக்களை கையகற்றல் | | 6,342,000.00 |
| கமக்காரர் இறப்பு பணிக்கொடை நிதியம் | 61,601,377.25 | 74,963,733.06 |
| கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | (525,500.27) | (855,499.92) |
| ஆண்டில் முதலீடுகள் | (11,544,393.64) | 51,619,754.07 |
| ஆதனம், சாதனம், பொறித்தொகுதிக் கொள்வனவு | (1,410,180.50) | 276,737.50) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப்பாய்வு** | **50,068,898.56** | **131,905,630.44** |
| **நிதிசார் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வு** | | |
| நெடுங்கால கடனெடுத்தல்களிலிருந்து காசு | | |
| நெடுங்கால கடன் மீளச்செலுத்துதல் | | |
| **நிதிசார் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்வு** | | |
| | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் அதிகரித்தல் | **16,273,041.09** | **-2,119,183.97** |
| **ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்** | **14,746,687.14** | **166,865,871.11** |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும்** | **31019728.23** | **14746687.14** |

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**
**கமத்தொழில் காப்புறுதித் திட்டம்**
**2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1. பொதுவான கொள்கைகள்**

**1. 1 அறிக்கையிடல் அமைப்பாண்மை**

கமத்தொழில் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 இன் 20 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, இலக்கம் 117 இல் அமைந்துள்ளது.

**1. 2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

கமத்தொழில் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், மூலிகைச் செடிகள், பண்ணை விலங்குகள், மீன் பிடிக் கைத்தொழில், காடு வளர்ப்பு, கமத்தொழிற் சாதனங்களும் கருவிகளும், கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை உற்பத்திகள், மூலிகைச் செடிகளின் உற்பத்திகள், மீன்பிடி மற்றும் காடுகளுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்தல் , பாதுகாத்துவைத்தல் உள்ளிட்டதாக கமத்தொழில் காப்புறுதியில் சபை பிரதானமாக ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் கமத்தொழில் புரிபவர்களுக்கு மருத்துவ நலன்களையும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் வழங்கும் நடவடிக்கைகளிலும் சபை ஈடுபட்டு வருகின்றது. மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் சபையின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் மாற்றமேதும் ஏற்படவில்லை.

**1.3 தயாரித்தலுக்கான அடிப்படை**

**(அ) இசைவுக் கூற்று**

இந்த நிதிக்கூற்றுகள் நிதிநிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளை உள்ளடக்குகின்றன. இந்த கணக்குக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ( இ.நி.அ.நி. / இ.க.நி.) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

**(ஆ) மதிப்பீட்டுக்கான அடிப்படை**

சம்பந்தப்பட்ட குறிப்புகளின் கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் தவிர்ந்ததாக நிதிக்குற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**(இ) ஒப்பீட்டுரீதியான தகவல்கள்**

நடப்புக் காலஎல்லையில் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காகவும் இடைக்கால ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும் பொருட்டும் நிதிக்கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்துவிதமான பணத்தொகைகளுக்காகவும் முந்திய

காலப்பகுதியுடன் தொடர்புடையதாக அளவுசார்ரீதியான, தொடர்உரைசார்ந்த மற்றும் விபரமானதை உள்ளிட்ட ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் வகையினங்களை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும் பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பண அளவுகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஈ) நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்ற பழக்கத்திலுள்ள பண அலகு**

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் நடைமுறைசார்ந்ததும் புழக்கத்தில் உள்ளதுமான பண அலகான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(உ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பாவனை**

இ.நி.அ.நி./ இ.க.நி. க்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள்,பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவுகளின் பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றன. ஈடுபடுத்தப்பட்ட இந்த மதிப்பீடுகளும் தீர்மானங்களும் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளை திருத்தியமைத்தல் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் மாத்திரம் தாக்கமேற்படுத்துமாயின் அந்த மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்கால காலவரையறைகளுக்கு அத்தகைய திருத்தியமைத்தல் தாக்கமேற்படுத்துமாயின் திருத்தியமைத்த காலவரையறைக்கும் எதிர்காலகால வரையறைகளுக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நிதிக்கூற்றுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அளவுகள்மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றி கணிசமான துறைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(ஊ) நடப்புத் தொழில்முயற்சி (இடையறா வழியுரிமை)**

நடப்புத் தொழில்முயற்சி என்ற வகையில் இடையறா வழியுரிமை கொண்டதாக இயங்க சபைக்குள்ள ஆற்றல் பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றைச் செய்துள்ளது. எனவே நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்படுகின்றன.

**2. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்**

**2.1ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி**

**(அ) ஏற்றுக்கொள்ளலும் கணிப்பீடுசெய்தலும்**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினங்கள் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் சேதங்களும் நட்டங்களும் கழிக்கப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுக்கிணங்கவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அனைத்தும் திரண்ட தேய்மானம் அல்லது பெறுமதியின் ஒட்டுமொத்த சேதமடைதல்களைக் கழித்து கிரயத்திலேயே அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதனமொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் கழிக்கப்படுகின்றது. ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கணிசமான பகுதிகள் ஒருகாலப்பகுதிக்குள் மீள்நிறுவப்படவேண்டிய அவசியமேற்படுமிடத்து மீள்நிறுவப்பட்ட பகுதியை ஏற்றுக்கொள்ளலிலிருந்து நீக்கி புதியபகுதி அதன் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் கொண்டதாக அமைப்பாண்மையால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஏனைய அனைத்துவிதமான திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புக்கிரயம் உறப்பட்ட செலவினமாக வருமானக்கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**(ஆ) கிரயம்**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது அவற்றின் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் நேரடியாக உறப்பட்ட கிரயத்தையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிரந்தரமான தன்மையுடைத்தான சொத்துக்களைக் கொள்ளல், விரிவாக்கல் மற்றும் முன்னேற்றகரமாக்குவதற்காக உறப்பட்ட அடுத்தடுத்து வருகின்ற செலவுகள் மூலதன செலவுகளாக கருதப்படுகின்றன.

பிரதான பரிசோதித்தல்களையும் உள்ளிட்டதாக தனிவேறான கணக்குகள் பதியப்பட்டடுள்ள ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் வகையினமொன்றை மீள்நிறுவுவதற்காக உறப்பட்ட செலவினம் மூலதனமயமாக்கப்படும். ஏனைய அடுத்தடுத்து வருகின்ற கிரயங்கள் அப்பகுதிக்குள் உள்ளடங்கிய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவருவதற்கான ஆற்றல் இருப்பினும் வகையினத்தின் கிரயத்தை நம்பத்தகுந்தவகையில் அளவிட இயலுமாயினும் மாத்திரமே மூலதனமயமாக்கப்படும்.

**தேய்மானம்**

எளிய வழிமுறையின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ள வருடாந்த வீதங்களில் அச்சொத்துக்களின் பயனுள்ளஆயுட்காலத்தில் அந்த அளவுகளை பதிவேடுகளிலிருந்து அகற்றும் பொருட்டு தேய்மானம் விபரமான வருமானக் கூற்றில் செலவினமாக காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டங்கள் | **4%** |
| மோட்டார்வாகனம் | **20%** |
| தளபாடங்களும்பொருத்திகளும் | **10%** |
| பிரச்சார சாதனங்கள் | **10%** |
| சேதத்தடுப்புச் சாதனங்கள் | **10%** |
| அறுவடைச் சாதனங்கள் | **10%** |

| | |
|---|---|
| துவிச்சக்கர வண்டிகள் | **20%** |
| நிலஅளவைச் சாதனங்கள் | **10%** |
| எடைத் தராசுகள் | **10%** |
| நலன்புரிச் சாதனங்கள் | **10%** |
| தொலைபேசி | **20%** |
| கணனி | **20%** |
| மோட்டார் சைக்கிள் | **20%** |

### 2.2 அருவச் சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்கத்தக்க எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாய்ந்து வரக்கூடிய நிலைமைகள் இருக்குமாயின் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இ.க.நி.-38 அருவச்சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பத்தக்க வகையில் அளவிட இயலுமாயின் அருவச்சொத்துக்களாக ஏற்றுக்காள்ளப்படும். அதற்கிணங்க இச்சொத்துக்கள் திரண்ட இலதாக்கல் அல்லது ஏதேனும் திரண்ட சேதங்கள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்படுகின்றன.

கணனி மென்பொருள்கள் எளியநேர்கோட்டு அடிப்டையில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் இலதாக்கப்படும்.

### 2. 3 பட்டியலிடப்பட்ட பண்டங்கள்

பட்டியலிடப்பட்ட பண்டங்கள் ஆகக்குறைந்த கிரயத்திலும் நிகர தேறிய பெறுமதியிலுமே மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சிப் பணிகளில் மதிப்பீடு செய்யப்பட்ட பூர்த்திசெய்தல் மற்றும் விற்பனைச் செலவுகளைக் குறைத்த பின்னர் மதிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை விலையாகும். இந்த கிரயத்தில் கையிருப்பு பண்டங்களைக் கொள்வனவுசெய்தல் மற்றும் அவை தற்போது இருக்கின்ற இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்குகின்றன.

### 2.4 நிதிசார் சொத்துக்கள்

இ.க.நி. 39 இல் விடயப்பரப்பில் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமான வகையில் இலாபம் அல்லது நட்டம், கடனும் வருமதிகளும், முதிர்ச்சி வரை தடுத்துவைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்பனை செய்யப்படவுள்ள நிதிசார்சொத்துக்கள் அல்லது எதிர்கால இழப்புக்காப்பாக பெயரிடப்பட்ட பெறுதிக் கருவிகள் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.
தனது நிதிசார் சொத்துக்களின்அடிப்படை ஏற்றுக்கொள்ளலின்பேரில் பணிப்பாளர் சபையானது அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கின்றது.

நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாகசொத்துக்கள் நியாயமான பெறுமதியாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடி உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயத்திற்கும் தொடக்கத்தில் ஏற்றுக்காள்ளப்படும்.
கடன் மற்றும் வருமதிகளும் வைப்புக்களும் அவை தொடங்கப்பட்ட தினத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய நிதிசார்சொத்துக்கள் அனைத்தும் (இலாபம் மற்றும்

நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு குறிப்பிட்டுத்தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளிட்டதாக) அளிப்புப் பத்திரத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கே தொடக்கத்தில் ஏற்றுக்காள்ளப்படும்.
ஏதேனும் சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்வுகள் மீதுள்ள உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமை நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின் மீதுஉடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமையானது அது கையளிக்கப்படுகின்ற வேளையில் சபையின் நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுதலை நீக்கும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றில் சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்றுக்காள்ளப்படும்.

நிதிசார்சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு நிதி அளவினை எதிரீடுசெய்ய சபைக்கு சட்டமுறையான உரிமை உள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலவுஈடுசெய்ய அல்லது சொத்துக்களை தேறவைத்து பொறுப்பினை சமாந்தரமாக செலுத்தித்தீர்க்க கருதப்படின் மாத்திரம் தேறிய பணஅளவு நிதிநலமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.
சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு மற்றும் குறுங்கால முதலீடுகளும் வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் உள்ளடங்கும்.

**(அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார்சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமானபெறுமதிக்கு நிதிசார்சொத்துக்களுக்கு வர்த்தகத்திற்காக தடுத்துவைக்கப்படுகின்ற நிதிசார்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் பெயர் குறிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்கள் உள்ளடக்கப்படும். நிதிசார் சொத்துக்கள் கிட்டிய நடப்பு விற்பனை அல்லது மீள்கொள்வனவுப் பணிக்காகக் கொள்ளப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படும்.
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் அல்லது நிதிசார் செலவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான பெறுமதியின் மாற்றங்ளைக் கொண்டதாக நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன

**(ஆ) கடனும் வருமதியானவையும்**

கடனும் வருமதியானவையும்முனைப்பான சந்தையொன்றில் விலை மட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்பொறுப்புக்களாகும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர்அத்தகைய நிதிசார்சொத்துக்கள் சேதம் கழிக்கப்பட்டு அடுத்தடுத்ததாக இலதாக்கப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பீடு செய்யப்படும். கொள்ளப்பட்ட வேளையில் ஏதேனும் தள்ளுபடி அல்லது இலதாக்கப்பட்ட மற்றும் பயனுறுதிமிக்க வட்டிவழிமுறையின் உள்டங்கிய பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தைக் கருத்திற்கொண்டே இலதாக்கப்பட்ட கிரயம் கணிப்பீடுசெய்யப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை விபரமான வருமானக் கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும்.சேதம் காரணமாக தோன்றுகின்ற நட்டங்கள் நிதிக்கிரயத்தின் விபரமான வருமானக்கூற்றில் ஏற்றுக்காள்ளப்படும்.

வர்த்தக வருமதிகள், ஊழியர்கடன், வைப்புக்கள், முற்பணம், ஏனைய வருமதியான காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பவற்றினையே கடனும் வருமதிகளும் உள்ளடக்குகின்றது.

### (இ) முதிர்ச்சிடையும் வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்

நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களும் நிலையான முதிர்ச்சியடைதல்களும் முதிர்ச்சிடையும்வரை தடுத்துவைத்துக் கொள்வதற்கான ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் சபைக்கு உள்ளவிடத்து அவை முதிர்ச்சிடையும்வரை தடுத்துவைக்கப்பட்டவையாக கருதப்படும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் முதிர்ச்சிடைதல் வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள் சேதம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி வழிமுறை பயன்படுத்தப்பட்டு அடுத்தடுத்ததாக இலதாக்கப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிக்கப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை இலதாக்கல் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாகத் தோன்றுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் முதிர்ச்சிடையும்வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன

### (ஈ) விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக உள்ளவயென பெயர்குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனும் நிதிசார் சொத்துக்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டிராத பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களாகும். ஆரம்ப ஏற்றுக்காள்ளலின் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேதநட்டங்கள் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்றுக்காள்ளப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்றிக் காள்ளப்படும். முதலீடொன்றினை ஏற்றுக்கொள்வதை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வைப்படுத்தப்படும்.

ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபையானது எந்தவொரு நிதிசார் சொத்தையும் பெயர்குறிக்கவில்லை.

### 2.5 நிதிசார் சொத்துக்களின் சேதம்

ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைந்தமைக்கான பலனால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் இடம்பெற்றிருப்பின் சொத்தின் எடுத்துச்செல்லும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்காள்வதன் ஊடாக சேதத்தின் அளவு கணிப்பீடு செய்யப்படும்.

### 3.பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

கேள்வியின்பேரில் அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட உள்ளவையே நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட உள்ள சொத்துக்களாக அமையும் . அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டியுள்ள மீதிகளே நடைமுயல்லாப் பொறுப்புக்களாக அமைகின்றன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறிந்த எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இறந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டரீதியான அல்லது உடன்பாடு ரீதியான கடப்பாடு உள்ளவிடத்தும் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே பாய்ந்துசெல்வதை அவசியப்படுத்த இடமுள்ளவிடத்தும் ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### 3.1 உரிமைகோரல்களுக்கான ஏற்பாடுகள்

செலுத்தப்படாத இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள் பயிர்களின் அபாயநேர்வுக் காரணிகள் மற்றும் காப்புறுதிபெறுனரின் விடயத்தின் மீது தங்கி இருப்பதோடு 2014 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்ட அட்டணையில் காட்டப்பட்டுள்ளன.

| | **சேதங்களுக்கான ஏற்பாடுகள்** |
|---|---|
| நெல் | 56,000,000.00 |
| கால்நடை | 8,000,000.00 |
| சுவசெத காப்புறுதி | 800,000.00 |
| துணைப் பயிர்கள் | 22,000,000.00 |
| | **86,800,000.00** |

### 3.2 அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடுகள்

ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் அறவிடமுடியாக் கடன்படுனர் மீதிகளின் 05 % அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 3.3 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – “ இளைப்பாற்று நன்மைக் கிரயம்” மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் அமைந்தொழுகக்கூடிய வகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காக சேவையின் முதலாவது வருடம் நிறைடைந்ததில் இருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலம் நிறைவடைவதிலிருந்து மாத்திரமே ஊழியருக்கான பொறுப்பு தொடங்குகின்றது. பொறுப்புக்களுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

**3.4 வரிவிதிப்பு**

1990 இன் 22 ஆம் இலக்கமுடைய உண்ணாட்டரசிறை சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் பிரகாரம் சபை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றது.

**3.5 மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புகளும்**

பொருளாதார நன்மைகளை சாட்டுதல்செய்ய வாய்ப்பற்ற அல்லது நம்பகத்தன்மையை அளவிட இயலாத சந்தர்ப்பங்களில் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற உள்ளார்ந்த கடப்பாடுகளாகும்.

சபையின் மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில்வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**4 விபரமான வருமானக் கூற்று**

**4.1 வருமானம்**

**1.** சபையின் வருமானம் காப்புறுதி தவணைப்பணம், திறைசேரி உண்டில்கள் மற்றும் ஊழியர் கடனுக்கான வட்டி வருமானம் மற்றும் பிற வருமானங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**2.** அனைத்து வருமானமும் அட்டுறு அடிப்டையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**3.** 2014 பெரும்போகத்தில் காப்புறுதி தவணைப்பண சேகரிப்பிலிருந்து கிடைத்த வருமானம் நடப்பு ஆண்டுக்காக எடுத்துவரப்பட்டுள்ளது. நடப்பு வருடத்தின் பயிர்ச்செய்கைப் போகம் தொடர்பில் ஐந்தொகைத் தேதிக்குப் பின்னர் கிடைத்த வருமானம் வருமதியான தணைப்பண வருமானமாக கருதப்பட்டுள்ளது

**4.** 2014 ஆம் ஆண்டுக்காக மீண்டுவரும் செலவினங்களுக்கான அரசாங்கக் கொடை கிடைத்துள்ளது.

**5.** மூலதனச் செலவினங்களுக்காக கிடைத்த அரசாங்கக் கொடைகள் படிப்படியான அடிப்படையில் வருமானமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

**4.2 வருமானத்தை ஏற்றுக்கொள்ளல்**

**1.** காப்புறுதி தவணைப்பண வருமானம் காப்புறுதி செய்யப்பட்ட காலத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**2.**மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையில் அமைவதோடு ஏற்புடைய செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

**3.** அட்டுறு வருமானம் கால அடிப்படையில் அட்டுறு நிலையடையும்.

**4.3 செலவுகள்**

உறப்பட்ட கிரயம் மற்றும் திட்டவட்டமான செலவு வகையின ஈட்டல்களுக்கிடையிலான நேரடியான தொடர்பின் அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்றுக்கொள்ளப்படும். சபையினைப் பேணிவருகையிலும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனுடையதாக பேணிவருகையிலும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருடத்திற்கான மிகையினை தயாரிக்கையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது

**4.4 மிகைநிலை**

4.4 அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட பின்னர் மிகைநிலை கணிப்பிடப்படும். ஆதனம், சாதனம் மற்றும் பொறித் தொகுதியில் அறிந்த எல்லா பொறுப்புக்களும் தேய்மானம் செய்யப்படும்.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கண்க்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றதென்பது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 01- நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்:** நியமத்தின் 54 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டவாறு நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களது பிரித்தெடுப்புகள் நிதிக்கூற்றுக்களில் முறைப்படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **எல்கேஏஎஸ் 07- காசுப்பாய்ச்சல் கூற்று:** மூலதன செலவினத்திற்கான அரசாங்க மானியம் மற்றும் அரசாங்க மானியத்தின் காலக்கழிவு என்பவற்றின் முறையே ரூபா 3,000,000 மற்றும் ரூபா 2,203,492 என்பன நிதியளிப்பு நடவடிக்கைகளாக வகைப்படுத்தவதற்கு பதிலாக முதலீட்டு நடவடிக்கைகளாக தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) **எல்கேஏஎஸ் 08- கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டிலுள்ள மாற்றங்கள் மற்றும் தவறுகள்:** முன்னைய ஆண்டு சீராக்கல்களின் விபரங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு குறிப்புகளாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **எல்கேஏஎஸ் 16- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்:** சபையால் இன்னமும் பயன்படுத்தப்படுகின்ற 21 இற்கு மேலாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) **எல்கேஏஎஸ் 19- ஊழியர் நன்மைகள்:** ஓய்வுபெறல் நன்மைகளின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்ணயிப்பு நலன்புரித் திட்டத்திற்காக செய்யப்பட்ட உள்ளபடியான மதிப்பாய்வின் பங்களிப்பு நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட நலன்புரித் திட்டத்தின் கீழ் எதிர்கால பொறுப்புக்களை தீர்க்கும் நோக்கில் தொழில்கொள்வோனால் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) **எல்கேஏஎஸ் 24- தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்:** மீளாய்வாண்டின் போது சில தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் இருந்த போதிலும், அவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) **எல்கேஏஎஸ் 39- நிதி கருவிகள்:** ரூபா 34,852,840 தொகையான உத்தியோகத்தர் கடன்கள் நிதிச் சொத்துக்களாக கருதப்பட்டு அளவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிர்வாகச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,010,676 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக, ஆண்டிற்கான பற்றாக்குறையும் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 46,822 தொகையான வட்டி வருமானம் கணக்குகளில் விடுபட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வட்டி வருமானம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பணிக்கொடை, தரகுச் செலவினம் மற்றும் நெல் வருமானம் என்பவற்றிற்கான ஏற்பாடு மற்றும் செலுத்த வேண்டிய காப்புறுதி தரகு என்பன முறையே தவறான கணிப்பீடு காரணமாக முறையே ரூபா 4,182,288, ரூபா 1,151,341 மற்றும் ரூபா 194,501 ஆல் அதிகாரித்துக் காட்டப்பட்டிருந்தது.

4

(ஈ) குருநாகல் மாவட்டம் தொடர்பில் ரூபா 380,249 தொகையான வங்கியிலுள்ள காசு கணக்குகளில் விடுபட்டிருந்தது.

(உ) விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்திடமிருந்து பெறவேண்டிய கடனிற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 17,726,796 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக பதியப்பட்டிருக்கவில்லை, ஆதலால் ஆண்டிற்கான பற்றாக்குறை அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திரண்ட வருமானத்தின் பின்னர் தேறிய மிகைகள் கணிப்பீடு செய்வதற்கு முன்னர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபை ஒதுக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு தவறாக ரூபா 2,348,675 ஆன தொகை மாற்றப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான திரண்ட வருமானத்தின் பின்னரான தேறிய மிகைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

அபிவிருத்தி மற்றும் காப்புறுதிக் கிளையின் விரிவான பட்டோலையில் காட்டப்பட்ட தொகைக்கும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் வருமானம் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பில் பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி தொகை | அபிவிருத்தி மற்றும் காப்புறுதிக் கிளையின் விரிவான பட்டோலைகளின் படி தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| நெல் காப்புறுதி | 66,453,371 | 65,320,905 | 1,132,466 |
| கால் நடைக் காப்புறுதி | 12,211,640 | 12,056,547 | 155,093 |
| சுவசேத காப்புறுதி | 7,675,677 | 7,738,547 | 63,070 |
| விவசாய உபகரண காப்புறுதி | 112,328 | 245,254 | 132,926 |

| | | | |
|---|---|---|---|
| துணைநிலை பயிர் காப்புறுதி | 32,709,977 | 34,241,112 | 1,531,135 |
| இழப்பீட்டுக் கொடுப்பனவு | | | |
| கால் நடை | 4,396,137 | 4,351,215 | 44,922 |
| நெல் | 39,674,693 | 49,475,159 | 9,800,466 |
| துணைநிலைப் பயிர் | 23,895,125 | 15,174,165 | 8,720,960 |

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,625,688 கூட்டுமொத்த தொகையான ஊழியர்களின் கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் என்பன நீண்டகாலமாக அறவிடப்படாமல் கணக்குகளில் இருந்தன. மேலும், அதில், ரூபா 1,428,128 தொகை அல்லது 88 சதவீதம் 5 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(ஆ) விவசாயிகளின் ஓய்வூதிய கொடுப்பனவிற்காக விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 313,173,401 ஆன தொகை மற்றும் 2010 தொடக்கம் 2014 வரையான காலத்திற்கான அவற்றின் மீதான வட்டி 2014 திசெம்பர் 31 இறுதிவரையும் உரிய நிதியத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,176,333 தொகை தீர்ப்பனவு செய்யப்படாமல் 2010 இலிருந்து கணக்குகளில் இருந்தன.

(ஈ) இரண்டு அரசாங்க நிறுவனங்களிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 342,023 தொகையான நிலுவையாகவிருக்கின்ற சம்பளம் 2014 திசெம்பர் 31 வரையும் சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 29,869,384 கூட்டு மொத்த தொகையான பெறவேண்டிய வருமானம், செலுத்த வேண்டிய தரகு மற்றும் பெறவேண்டிய

கால்நடை முன் தவணைப்பணம் என்பன தொடர்பான விரிவான பட்டியல்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

**2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 124 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | வெற்றிட பதவிகளின் கடமைகளை மேவுதல் 03 மாதங்களிற்கு வரையறுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மேவுகை கடமைகளிற்காக நியமிக்கப்பட்ட 04 ஊழியர்கள் மீளாய்வாண்டு இறுதியில் நீண்டகாலமாக அந்த வெற்றிட பதவியில் வேலைசெய்திருந்தார். |
| (ஆ) **முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள்** | |
| (i) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்கம் மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய 30(I) ஆம் இலக்க | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக இரண்டு பதவியுயர் பெற்றிருக்காத ஊழியர்களிற்காக பதவியுயர்வு பெற்ற ஊழியர்களிற்கு உரிய சம்பள மட்டங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2009 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 30(II) ஆம் இலக்கம் | சம்பள மாற்றத்தின் காரணமாக ஏழு ஊழியர்களிற்கு ரூபா 151,610 மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது என்று கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போதான சபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 81.92 மில்லியன் பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 25.38 மில்லியன் மிகையில் விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில்

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### காப்புறுதித் திட்டங்களின் நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவலின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான காப்புறுதித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றலை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| விடயம் | அளவீடு | இலக்கு | | | | எய்தல் | | | | சதவீதமாக எய்தல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | |
| | | 2013 | 2014 | 2013 ரூபா (000) | 2014 ரூபா (000) | 2013 | 2014 | 2013 ரூபா (000) | 2014 ரூபா (000) | 2013 % | 2014 % | 2013 % | 2014 % |
| 1. பயிர் காப்புறுதி | | | | | | | | | | | | | |
| (அ) நெல் | ஏக்கர் | 88,424 | 81,825 | 90,107 | 90,740 | 49,108 | 50,851 | 57,386 | 65,321 | 55.54 | 62.15 | 63.69 | 71.99 |
| (ஆ) துணைநிலைப் பயிர் | ஏக்கர் | 54,708 | 24,000 | 44,165 | 48,165 | 11,899 | 16,550 | 24,770 | 34,241 | 21.75 | 68.96 | 56.09 | 71.09 |
| 2. கால்நடை காப்புறுதி | எண்ணிக்கை | 19,261 | 18,450 | 28,072 | 28,250 | 4,304 | 7,287 | 7,420 | 12,057 | 22.35 | 39.50 | 26.43 | 42.68 |
| 3. களஞ்சியக் காப்புறுதி | எண்ணிக்கை | 464 | 427 | 3,028 | 2,900 | 0 | 17 | 0 | 238 | 0.00 | 3.98 | 0.00 | 8.21 |
| 4. விவசாய உபகரணங்கள் | எண்ணிக்கை | 3,450 | 2,382 | 13,559 | 12,000 | 87 | 55 | 737 | 245 | 2.52 | 2.31 | 5.44 | 2.04 |
| 5. சுவசெத மற்றும் ஆயுள் காப்புறுதி | எண்ணிக்கை | 50,659 | 50,300 | 31,613 | 29,935 | 2,252 | 11,289 | 1,369 | 7,739 | 4.45 | 22.44 | 4.33 | 25.85 |

ரூபா 107.30 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 25.72 மில்லியன் மற்றும் ரூபா 98.35 மில்லியனால் முறையே காப்புறுதி தவணைப்பண வருமானத்தின் அதிகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவின் வீழ்ச்சி என்பன இந்த முன்னேற்றத்திற்காக பிரதான காரணமாயிருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னர் முன்னைய 5 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் மிகைகள்/ பற்றாக்குறை 2011 ஆம் ஆண்டிற்கானது தவிர பெருமளவு குறைவடைந்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| மொத்த வருமானம் | 124.6 | 109 | 139 | 175 | 128 | 114 |
| மொத்தச் செலவினம் | 171.9 | 260 | 217 | 150 | 361 | 121 |
| அரசாங்க மானியத்தின் முன்னர் மிகை/ (பற்றாக்குறை) | (47.3) | (151) | (78) | 25 | (233) | (7) |
| அரசாங்க மானியம் | 72.7 | 69 | 63 | 63 | 85 | 75 |
| அரசாங்க மானியத்தின் பின்னர் மிகை/ (பற்றாக்குறை) | 25.4 | (82) | (15) | 88 | (148) | 68 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், பொதுத் திறைசேரியின் நிதி உதவி இல்லாமல் சபையின் தொடந்தியங்குதலின் இயலுமை ஐயத்திற்கிடமாக உள்ளதென அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்காள்ளப்படுகின்றன.

கால்நடைகள், களஞ்சியங்கள், விவசாய உபகரணங்கள், சுவதெச மற்றும் ஆயுள் காப்புறுதி போன்ற அத்தகைய காப்புறுதி திட்டங்களின் பௌதீக மற்றும் இலக்குகளை அடைதல் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் ஒப்பிடும் போது 50 சதவீதத்தை விட குறைவாகவே இருந்தது.

## 4.2 செயற்திட்டத்தில் தாமதங்கள்

2008 ஆம் ஆண்டில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணியின் அபிவிருத்திக்காக ரூபா 585,800 ஆன செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் அது ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மூலதன முற்பணமாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 வரையும் நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான சொத்துக்களின் முறையற்ற பாவனை

வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான ஏழு ஜீப்கள் வாகனங்களின் உடமையை மாற்றாமல் நீண்டகாலமாக சபையால் முறையற்ற ரீதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.4 மனிதவள முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறைவேற்றுதரம், நிறைவேற்று தரமல்லாதோர் மற்றும் சிற்றூழியர் மட்டங்களில் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 125 வெற்றிடங்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும், சபையால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 32 வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்த போதிலும் மீளாய்வாண்டில் சபையின் மாவட்ட அலுவலகங்களில் 34 மிகையான பதவியணி அவதானிக்கப்பட்டது.

(இ) 12 பிரதான பதவிகளிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும் விளம்பரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதிவரையும் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**4.5. சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

சபையானது மீளாய்வாண்டின் போது ரூபா 2,284,800 பெறுமதியான அல்மனைக்கின் 500,000 பிரதிகளை அச்சிட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 985,900 பெறுமதியான 246,475 பிரதிகள் 2015 பெப்ரவரி வரையும் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதைக் காட்டுகிறது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை
(ஆ) வாகனங்களின் பாவனை
(இ) ஆளணி முகாமைத்துவம்

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்கே
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. FB/E/FPS/1/14/09 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 22 April 2016

The Chairman,

Agriculture and Agrarian Insurance Board.

**Report of the Auditor General on the Financial Statements of the Farmers' Pension and Social Security Benefit Scheme for the year ended 31 December 2014 in terms of Section 14(2)(c) of the Finance Act, No.38 of 1971.**

---

Reference to my letter of even number dated 18 September 2015 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.M.Gamini Wijesinghe

Auditor General

Copies: 1. Secretary – Ministry of Finance.

2. Secretary – Ministry of Agriculture.

මගේ අංකය / எனது இல. / My No. எவ்பீ/ஈ/எவ்பிஎஸ்/1/14/05 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2015 செப்தெம்பர் 18

தலைவர்,

விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபை

**விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 28(4)ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)ஏ பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2015 ஆகஸ்ட் 07 இல் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

திட்டமானது மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 57,249 மில்லியன் எதிர்மறையான ஓய்வூதிய நிதிய கணக்கு மீதியினை வைத்திருந்ததுடன் திட்டத்தின் உறுப்பினர்களிடமிருந்து போதிய பங்களிப்பினை சேகரிப்பதற்கு பதிலாக விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபை மற்றும் விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தில் இருக்கின்ற வேறு நிதியங்களிலிருந்து கடன்கள் பெறுவதன் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுவதால் 2009 ஆம் ஆண்டில் ரூபா 663.8 மில்லியன் சாதக மீதியுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. இதன் விளைவால், பொதுத் திறைசேரியிடமிருந்தான நிதி உதவி இல்லாமல் தொடர்ந்தியங்கும் தன்மையாக தொடருவதற்கு திட்டத்தின் இயலுமை ஐயத்திற்கிடமாக உள்ளது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான திட்டத்தின் நிதியக் கணக்கு மீதி கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஆண்டு இறுதியிலுள்ளவாறு நிதிய கணக்கு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 2014 | (57,249.4) |
| 2013 | (53,968.5) |
| 2012 | (48,945.1) |
| 2011 | (44,154.2) |
| 2010 | (40,536.7) |
| 2009 | 663.8 |

மேலும், திட்டமானது 2014 மார்ச் 14 ஆம் திகதிய 1853/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட அறிவித்தல்களின் கீழ் புதிய திட்டத்தை அமுல்படுத்தியது. இதற்கிணங்க, மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 1,954.8 மில்லியன் அரச மானியத்தைப் பயன்படுத்தி புதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதிய கொடுப்பனவாக ரூபா 1,977.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், திட்டமானது புதிய திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பங்களிப்பு பற்றி 2014 இறுதிவரை பங்களிப்பாளர்களுடன் கலந்தாலோசிக்காததுடன் புதிய திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது எந்த ஒரு பங்களிப்பையும் சேகரித்திருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (எல்கேஏஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஸ்-07, காசுப்பாய்ச்சல் கூற்று-** செயற்பாட்டு, முதலீட்டு, மற்றும் நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் முறையாக வகைப்படுத்தி அதற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **எல்கேஏஸ்-08, கணக்கீட்டுக் கொள்கைகள்** , கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் தவறுகள் - முன்னைய ஆண்டு சீராக்கங்கள் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **எல்கேஏஎஸ்-16, ஆதனம் , பொறி மற்றும் உபகரணங்கள்** - தற்போது பயன்படுத்தப்படுகின்றதும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதுமான சொத்துக்களின் விபரங்கள் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **எல்கேஏஎஸ்-19, ஊழியர் நலன்புரி** - ஓய்வூதிய பொறுப்பிற்கான உள்ளபடியான மதிப்பீடு 2007 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர், ஓய்வூதிய பொறுப்பிற்காக உள்ளபடியான மதிப்பீடு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வரையறுத்த நலன்புரி திட்டத்தின் கீழ் பொறுப்பை தள்ளுபடி செய்யும் நோக்கில் திட்டத்தால் பங்களிப்பு முதலீடு செய்யப்பட்டிருக்காததுடன் ஓய்வூதிய நலன்களின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **எல்கேஏஎஸ்- 20, அரச மானியங்களிற்கான கணக்கீடு மற்றும் அரச உதவிக்கான வெளிப்பாடு** – 1989 இற்கு முன்னர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 547,885 தொகையான முலதன மானியங்கள் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) **எல்கேஏஎஸ்-24, தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்** - மீளாய்வாண்டின் போது சில தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்டசெயலகத்தின் வங்கிக் கணக்கிலிருந்த ரூபா 472,878 வங்கிமீதி நிதிக்கூற்றுக்களில் காசு மற்றும் காசுக்குச் சமனானவையாக காட்டுவதற்குப் பதிலாக பெறவேண்டிய வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 686,033 தொகையான மீள்நிதியிடப்பட்ட பங்களிப்பு விவசாயிகளின் பங்களிப்புக்கு தவறுதலாக வரவுவைக்கப்பட்டிருந்தது. ஆகவே மீளாய்வாண்டிற்கான விவசாயிகளின் பங்களிப்பு அதேதொகையால் குறைத்துக் காட்டடப்பட்டிருந்தது.

(இ) பணிக்கொடை ஏற்பாடு கணிப்பீட்டுத் தவறால் ரூபா 4,537,453 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 574,696 தொகையான பெறவேண்டிய வருமானம் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 6,628,887 தொகையான பெறவேண்டிய மொத்த வருமான மீதிகளில் ரூபா 2,111,110 அல்லது 30 சதவீதம் மாத்திரமே உரிய தொடர்புபட்ட பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 2,882,031 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் 1997 இலிருந்து தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) 2010 இல் ஓய்வூதிய பொறுப்புக் கொடுப்பனவிற்காக பெறப்பட்ட குறுகிய காலக் கடன்கள் மற்றும் அவற்றின் மீது செலுத்த வேண்டிய வட்டி ரூபா 959,420,810 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை தீர்க்கப்படாமல் கணக்குகளில் இருந்தது.

(ஈ) ரூபா 704,479 தொகையான பெறவேண்டிய வருமானம் 2006 இலிருந்து உரிய தரப்பினரிடமிருந்து சேகரிக்கப்படாமல் கணக்குகளில் இருந்தது.

(உ) திட்டம் 2014 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதிய பணமாக ரூபா 1,978 மில்லியனை செலுத்தியிருந்தது. எனினும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்தவேண்டிய ரூபா 3,033 மில்லியன் தொகை மீளாய்வாண்டிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச்சட்டத்தின் பகுதி III இன் 20 ஆம் பிரிவு | ஆலோசனையாளர் குழு 06 அலுவலகத்துக்கு வெளியான உறுப்பினர்களையும் 06 தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட 12 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டியிருந்த போதும் 07 உறுப்பினர்கள் மாத்திரமே 2014 ஆம் ஆண்டிற்காக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) நிதிப்பிரமாணம் 395(எச்) | சேகரிப்பு வங்கியிடல் , காசோலை எழுதுதல் அல்லது காசுப்புத்தகம் பேணுதலுடன் தொடர்புபட்ட நபர் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக வங்கிக்கணக்கிணக்கக் கூற்றை தயாரித்திருந்தார். |
| | (ii) நிதிப்பிரமாணங்கள் 880, 881 | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அவர்களுடைய நியமனத்திலிருந்து இரண்டு மாதங்களிற்குள் பிணையை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் காசோலையில் கையொப்பமிடுபவர் , வருமானத்தை சேகரிக்கும் உத்தியோகத்தர் 2014 இறுதிவரை பிணைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 3,281,960,985 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 5,022,289,687 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன்

ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,740,328,702 அல்லது 34.65 சதவீதத்தால் முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் மற்றும் விவசாயிகளின் பங்களிப்பு முறையே 5,067 சதவீதம் மற்றும் 40 சதவீதத்தால் அதிகரித்தமையும் கடன் வட்டி மற்றும் பங்களிப்பின் மீளளிப்பு முறையே 24 சதவீதம் மற்றும் 39.7 சதவீதத்தால் குறைவடைந்தமையும் இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகவிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளின் சுட்டிக் காட்டல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மொத்த வருமானம் | 150,295 | 40,104 | 61,148 | 115,434 | 170,898 |
| மொத்தச் செலவினம் | (2,174,449) | (1,847,921) | (1,587,686) | (1,402,379) | (1,195,110) |
| ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு | (3,285,970) | (3,288,353) | (3,216,991) | (3,059,459) | (2,938,033) |
| அரசாங்க மானியத்திற்கு முன்னர் ஆண்டிற்கான பற்றாக்குறை | (5,310,124) | (5,096,170) | (4,743,529) | (4,346,404) | (3,962,245) |
| அரசாங்க மானியம் | 2,027,550 | 69,000 | 71,555 | 727,605 | 39,500 |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 613 | 711 | 1,321 | 1,228 | 1,477 |
| அரசாங்க மானியத்தின் பின்னர் பற்றாக்குறை | (3,281,961) | (5,026,459) | (4,670,653) | (3,617,571) | (3,921,268) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 இல் வருமானம் 275 சதவீதத்தால் அதிகரித்த அதேநேரம் 2010 முதல் 2013 வரையான காலத்தின் போது 77 சதவீதத்தால் படிப்படியாக குறைவடைந்திருந்த அதேநேரம் மொத்தச் செலவினம் அதே காலப்பகுதியின் போது 82 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) அரசாங்க மானியத்திற்கு முன்னான பற்றாக்குறைகள் உள்ளபடியான விடயங்களில் ஓய்வூதிய பொறுப்பை தாபித்தமை மற்றும் செலவினத்தின் அதிகரிப்பு என்பன காரணமாக 2010 முதல் 2014 வரையான காலத்தின் போது தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

(iii) அரசாங்க மானியத்திற்கு பின்னரான பற்றாக்குறை 2010 தொடக்கம் 2013 வரையான காலத்தின் போது சடுதியாக அதிகரித்திருந்த அதேநேரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியம் அதிகரித்தமையால் இது 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் திட்டத்திற்காக விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பங்களிப்புகள் | ஓய்வூதிய கொடுப்பனவு |
|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் |
| **2014** | **45** | 1,977.91 |
| 2013 | 32.1 | 1,646.98 |
| 2012 | 49.6 | 1,380.7 |
| 2011 | 97.6 | 1,226.7 |
| 2010 | 136.7 | 1,044.7 |

கடந்த நான்கு ஆண்டுகளிற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் சடுதியாக அதிகரித்திருந்தது இருந்த போதிலும் பெறப்பட்ட பங்களிப்புகள் கடந்த நான்கு ஆண்டுகளின் போது சடுதியாக குறைவடைந்திருந்ததுடன் நிலுவைத் தொகைகளின் கொடுப்பனவுகளினால் 2014 இல் இது அதிகரித்திருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு எந்தவொரு விவசாயியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயிகளின் பங்களிப்பான ரூபா 203,000,000 பாதிடப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 53,631,560 அல்லது 20 சதவீதம் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தள்ளுபடி செய்யப்பட்ட திட்டத்தின் அவர்களுடைய உறுப்புரிமையாக 71 பங்களிப்பாளர்களிற்கு ரூபா 667,373 தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கீழே காட்டப்பட்டவாறு 2009 ஆம் ஆண்டிலிருந்து முதலீடுகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி வருமானம் என்பன விரைவாக வீழ்ச்சியடைந்திருந்த அதேநேரம் 2014 இல் அதிகரித்திருந்தது.

| ஆண்டு | முதலீடுகள் | வட்டி வருமானம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2014 | 199.6 | 96.6 |
| 2013 | 14.5 | 1.9 |
| 2012 | 12.4 | 2.7 |
| 2011 | 30.7 | 1.6 |
| 2010 | 3.5 | 14.9 |
| 2009 | 582.2 | 138.9 |

(உ) 24 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2 உப அலுவலகங்களிலிருந்து ஓய்வூதிய கொடுப்பனவை தயாரிப்பதற்கு 7,176 கோவைகள் பெறப்பட்டிருந்த போதும் 3830 அல்லது 53 சதவீதம் மாத்திரமே 2014 திசெம்பர் 18 வரை செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கோவைகள் முறைப்படியாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

திட்டமானது 1992 இலிருந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 1,179,624 பெறுமதியான 117 தேறாத காசோலைகள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

திட்டத்தின் பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகளை கணனி மயப்படுத்துவதற்காக 1990 இலிருந்து ரூபா 27.48 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அத்தகைய கணக்குகள் 24 ஆண்டுகள் கடந்த பின்னரும் 2014 திசெம்பர் 31 இலும் கூட நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திட்டமானது பங்களிப்புக்களின் கொடுப்பனவிற்கு தகைமைபெற்ற பங்களிப்பாளர்களை நிர்ணயிப்பதற்கு போதிய தகவல்களை கொண்டிருக்கவில்லை.

மாவட்ட அலுவலகங்களிலும் கூட பங்களிப்பாளர்களின் கணக்குகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,791,679 பெறுமதியான நாற்பத்தியெட்டு காசோலைகள் மற்றும் ரூபா 7,152,249 பெறுமதியான வங்கி வரைவுகள் என்பன சபையின் 02 பணிப்பாளர்கள் மற்றும் ஒரு உதவிப் பணிப்பாளரால் 2008 ஆம் ஆண்டில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 369,590 ஆன ஓய்வூதிய பணத்தை தவறாகப் பயன்படுத்திய கள உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அவர் மீளாய்வாண்டின் போது சேவைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து ரூபா 100,000 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் ஊழியரின் இழப்பு காரணமாக வழக்கு மீளப்பெறப்பட்டிருந்தது. ஆகவே, மிகுதி ரூபா 269,590 அறவிட முடியாதிருந்ததுடன் இது தொடர்பில் 2014 திசெம்பர் 31 இறுதிவரை கணக்குகளில் அவசியமான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நோக்கத்திற்காக திட்டமானது ரூபா 6,880,534 தொகையை செலுத்தியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 6,769,568 அல்லது 6,100 சதவீத அதிகரிப்பைக் காட்டியிருந்தது.

**5. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத்திட்டம்**

சபையானது 2014 - 2016 வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்திருந்தபோதிலும் 2014 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தோடு நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதைக் காட்டுகிறது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பங்களிப்பாளர் கணக்குகள் மீதான கட்டுக்கபாடு

(இ) ஓய்வூதியக் கொடுபப்பனவுகள்

(ஈ) பாதீடு

(உ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } FB/E/FISH/1/14/02 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 23 November 2015

The Chairman.

Agricultural and Agrarian Insurance Board.

**Report of the Auditor General on the Financial Statements of the Fishermen's Pension and Social Security Benefit Scheme for the year ended 31 December 2014 in terms of Section 14 (2) (c) of the Finance Act, No.38 of 1971.**

---

Reference to my letter of even number dated 07 October 2015 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent here with.

W.P.C. Wickramaratne

Acting Auditor General.

Copies to : 1. Secretary – Ministry of Finance

2. Secretary – Ministry Agricultural

... 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

මගේ අංකය / எனது இல. / My No. எவ்பீ/ஈ/எவ்ஜஎஸ்எச்/1/14/02 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 2015 ஒக்தோபர் 07

தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

**மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1990 இன் 23 ஆம் இலக்க மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 28(4)ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி விரிவான அறிக்கையொன்று 2015 யூலை 22 இல் சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிலவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஓய்வூதிய நலத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

ஓய்வூதியப் பொறுப்பு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது மீள தாபிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது செய்யப்பட்ட ரூபா 211,396,733 தொகையான மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. ஆகவே, இது உரிய வருடங்களிற்கான நிதிசார் விளைவுகளைபாதகமாக பாதித்திருந்ததது. இதன் விளைவால், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திட்டத்தின் எதிர்மறையான தேறிய சொத்தின் நிலைமை ரூபா 1,930,371,414 இற்கு அதிகரித்திருந்தது. இதன்படி, எதிர்காலத்திலும் இந்த ஏற்பாடுகள் அதிகரிக்க வேண்டிய சாத்திய தன்மை உள்ளதுடன் இது திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையை பாரதூரமாக பாதித்திருந்தது.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றாமை (எல்கேஏஎஸ்)

எல்கேஏஎஸ் உடன் பின்வரும் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) **எல்கேஏஎஸ்- 07, காசுப் பாய்ச்சல் கூற்று-** ரூபா 211,396,733 தொகையான ஓய்வூதியப் பொறுப்புக்களிற்கான ஏற்பாடு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலாக காட்டுவதற்குப் பதிலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **எல்கேஏஎஸ் - 19, ஊழியர் நலன்புரி-** செயற்பாட்டு பங்களிப்பாளர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 2007 முதல் 2014 வரையான காலத்தின் போது 54,248 முதல் 30,735 வரை அல்லது 40 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது அதேநேரம் பொறுப்பிற்கான ஏற்பாடு அதே காலத்தின் போது ரூபா 1,242

மில்லியன் முதல் ரூபா 2,556 மில்லியன் வரை அல்லது 100 சதவீதம் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், ஓய்வூதியப் பொறுப்புக்கான உண்மையான மதிப்பாய்வு 2007 ஆம் ஆண்டில் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. உள்ளபடியான மதிப்பாய்வு மற்றும் கணக்கீடு நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் படி நிர்ணயிக்கப்பட்ட நலன்புரி திட்டத்திற்காக செய்யப்பட்டிருந்த போதிலும் பங்களிப்புகள் நிர்ணயிக்கப்பட்ட நலன்புரி திட்டத்தின் கீழ் எதிர்கால விலகல்களை இல்லாமலொழிக்கும் நோக்கில் திட்டத்தால் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் வங்கி கணக்கு தொடர்பில் ரூபா 332,401 தொகையான வங்கி மீதி காசு மற்றும் காசிற்கு சமமானவையாக காட்டுவதற்குப் பதிலாக வருமான வருமதிகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டுத் தவறு காரணமாக ரூபா 110,610 ஆல் பணிக்கொடைக்கான ஏற்பாடு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 இல் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட (கடன் மற்றும் வட்டி) ரூபா 646 மில்லியன் தொகை அறவிடப்படாமல் நிதிக்கூற்றுக்களில் தொடச்சியாக முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1,159,250 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்படப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் 1998 இலிருந்து தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1990 இன் 23 ஆம் இலக்க மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 20 | ஆலோசனையாளர் குழுவில் 06 முன்னால் உறுப்பினர்கள் மற்றும் 06 நியமன உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிற்கககாக 06 உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கபப்பட்டிருந்தனர். |
| (ii) பிரிவு 26 | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின்படி தவறு செய்த உறுப்பினர்களிடமிருந்து அவர்களுடைய உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) அத்தியாயம் 9 இன் 9.7 ஆம் பந்தி | பொதுத் திறைசேரியிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெறப்படாமல் சில உத்தியோகத்தர்களிற்கு ரூபா 522,295 மொத்தத் தொகையான விசேட படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 12,194,196 ஆன தேறிய இலாபத்திற்கு எதிராக ரூபா 7,170,305 ஆன தேறிய நட்டத்தை விளைவித்திருந்தது, ஆதலால் நிதிசார் விளைவுகளில் ரூபா 19,364,501 அல்லது 159 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 13,761,226 ஆல் அல்லது 24 சதவீதத்தல் மொத்த வருமானத்தின் குறைவு மற்றும் ரூபா 5,603,275 ஆல் அல்லது 13 சதவீதத்தால் மொத்த செலவினத்தின் அதிகரிப்பு மேற்குறிப்பிட்ட வீழ்ச்சிக்காக பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளின் சுட்டிக்காட்டல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | மாற்றங்கள் |
|---|---|---|---|
| | 2014 | 2013 | (அதிகரிப்பு/ வீழ்ச்சி) |
| | ரூபா | ரூபா | சதவீதம் |
| வட்டி வருமானம் | 38,533,361 | 52,346,551 | (26) |
| மீனவர் பங்களிப்புகள் | 1,456,710 | 2,904,746 | (50) |
| மீண்டெழும் செலவினத்திற்கான மானியம் | 3,000,000 | 1,500,000 | 100 |
| **மொத்த வருமானம்** | **42,990,071** | **56,751,297** | **(24)** |
| **கழி: செலவினங்கள்** | | | |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | (41,867,619) | (37,367,889) | 12 |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (3,459,264) | (3,226,101) | 7 |
| நிர்வாக மற்றும் நிதிச் செலவினம் | (4,833,493) | (3,963,111) | 22 |
| **மொத்தச் செலவினங்கள்** | **(50,160,376)** | **(44,557,101)** | **13** |
| **ஆண்டுக்கான இலாபம் /(நட்டம்)** | **(7,170,305)** | **12,194,196** | **(159)** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய திட்டத்தின் மொத்த பங்களிப்பு ரூபா 1,456,710 ஆக இருந்தபோதிலும் மீளாய்வாண்டிற்கான மொத்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் ரூபா 41,867,619 ஆக இருந்தது. ஆகவே, பங்களிப்பை விஞ்சிய ஓய்வூதிய கொடுப்பனவு 2,874 சதவீதத்தால் பெறப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டத்தின் நிதிய கணக்கிலுள்ள மீதி ஒட்டு மொத்த பற்றாக்குறை ரூபா 36.2 மில்லியனால் அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 16.6 மில்லியனாக அல்லது 30 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. .

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டமானது மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு புதிய பங்களிப்பாளர்கைள சேர்க்கும் நோக்கில் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கைளை நடாத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 1,100 பங்களிப்பாளர்களை சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட உள்ளபடியான பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 124 மாத்திரமேயாகும், ஆதலால், எய்தலானது 11 சதவீதத்ததை மாத்திரம் காட்டுகின்றது. மேலும், இருபது மாவட்டங்களில் எந்தவொரு பங்களிப்பாளரையும் சேர்த்திருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது உறுப்பினர்களிடமிருந்து ரூபா 2,720,000 ஆன பங்களிப்புக்களை பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது போதிலும், பெறப்பட்ட உள்ளபடியான பங்களிப்புகள் ரூபா 559,988 மாத்திரமேயாகும்.

(ஈ) மீளாய்வாண்டிற்காக 19,500 பங்களிப்பினர்களிடமிருந்து இலக்கிடப்பட்ட இரண்டாவது மற்றும் அதன் பின்னரான தவணைப்பண சேகரிப்பு பெறுகைகள் ரூபா 2,925,000 ஆக இருந்தது. இருந்தபோதிலும், 725 பங்களிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளபடியான சேகரிப்பு ரூபா 551,836 அல்லது 19 சதவீதம் மாத்திரமேயாகும்.

**4.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

திட்டமானது மீனவர் ஓய்வூதிய திட்டத்தின் உறுப்புரிமையை இழந்திருந்த பங்களிப்பாளர்களை இனங்காண்பதற்கும் அவர்களிடமிருந்து தவணைப்பண நிலுவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

**வட்டி வருமானத்தின் அங்கீகாரம்**

விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்காக விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரி திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதிகளில் மீளாய்வாண்டின் போது வட்டி வருமானமாக ரூபா 37,570,605 தொகை அடையாளங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிதிகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் தொடர்பில் இரண்டு திட்டங்களிற்கும் இடையில் எவ்வித உடன்படிக்கையும் இருக்கவில்லை. மேலும், இந்த வட்டி வருமானம் மீளாய்வாண்டின் மொத்த வருமானத்தின் 90 சதவீதத்தைப் பிரதிநிதித்துப்படுத்துகின்றது.

**5. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கு இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டன, ஆதலால் பாதீடானது வினைத்திறனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

6. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மீனவர்களிற்கான நலக் கொடுப்பனவுகள்
(இ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் மீதான கட்டுப்பாடுகள்
(ஈ) தவணைக்கட்டணங்களின் அறவீடு

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams } රක්ෂණ / ரக்ஷன / Rakshana
267, යුනියන් පෙදෙස, කොළඹ 2.
267, யூனியன் இடம், கொழும்பு 2.
267, UNION PLACE, COLOMBO 2.
තැ. පෙ. 21, த. பெ. 21 P.O. Box 21

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No. } 2014/4/5/மு/தீ/2   ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No. }   දිනය / திகதி / Date } 2015-08-12

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2014 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 14(2)(சீ) அறிக்கைக்கான பதில்களை வழங்குதல்.</u>**

2014 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதித் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பமிட்டது/ பண்டுக வீரசிங்க,

பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை.

| | සභාපති / தலைவர் / Chairman | සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephones | 448693 / 448694 | 438607 | 448691-2 / 438606 / 430058 |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 449316 | 438607 | |

**<u>கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (C) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்</u>**

**2. <u>நிதிக் கூற்றுகள்</u>**

**2.1 <u>வெளிப்டுத்திய அபிப்பிராயம்</u>**

**2.2 <u>நிதிக் கூற்றகள் மீதான கருத்துரைகள்</u>**

**2.2.1 <u>இலங்கை கணக்கீட்டு நியமங்கள்</u>**

**(அ)** நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் நியமத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**(ஆ)** அரச கொடைகள் நிதிசார் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட நிதியப் பாய்வாக காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(இ)** முந்திய ஆண்டின் சீராக்கல்கள் பற்றிய குறிப்பினை அடுத்துறுகின்ற ஆண்டிலிருந்து காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஈ)** நிலையான சொத்துக்களை கணக்குப் பதிகையில் கிரயத்தின் அடிப்படையில் கணக்குப் பதிதல் சபையின் கொள்கையாக அமைவதால் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அந்த அடிப்படையில் சரியாக கணக்குப் பதியப்பட்டுள்ளது.

**(உ)**ஊழியர்களின் இளைப்பாற்றுப் பணிக்கொடை பொறுப்புகள் உரிய வகையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதனோடு தொடர்புடைய முதலீட்டுச்சபையின் முதலீடுகளுக்குள்ளேயே நிலவுகின்றது.

**(உ)**கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தொடர்புடைய தரப்பினர் சம்பந்தமாக வெளிப்படுத்துதலை அடுத்த கணக்கறிக்கைகளில் குறிப்பொன்றாக வெளிப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(எ)** ஊழியர் கடன் வருமதியான கணக்கு மீதிகளின் கீழ் நிதிசார் சொத்தாக கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு அதனோடு தொடர்புடைய கணக்குக்கொள்கை குறிப்பு இலக்கம் 2.4 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**2.2.2 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>**

**(அ)** இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் திகதி வரை அறிக்கை செய்யப்பட்ட இனங்காணக்கூடியதாக அமைந்த அனைத்துச் செலவுகளும் அட்டுறு அடிப்படையில் கணக்குப் பதியப்பட்டுள்ளது. பின்னர் இனங்காணப்படுகின்ற செலவுகள் 2015 ஆம் ஆண்டுக்காக கணக்குப் பதியப்பட்டுள்ளது.

**(ஆ)** முதலீட்டு அட்டவணையில் வட்டி சரிவர கணிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க வருங்காலத்திலும் அந்நிலைமையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ)** பணிக்கொடை பொறுப்பு சரியானவகையில் கணிப்பிடப்பட்டுள்ளதோடு கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு மிகையான ஒதுக்கீடு இடம்பெறவில்லை.

**(ஈ)** இப்பணத்தொகை இன்றளவில் கிடைத்துள்ளதோடு தற்போது அப்பணத்தொகையை கணக்குப்பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(உ)** கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்கு வழங்கிய கடன்தொகைக்கான வட்டி இறப்புப் பணிக்கொடை நிதியத்தின் வட்டி வருமானத்தில் கணக்கப் பதியப்பட்டுள்ளது.

**(ஊ)** தொழிற்பாட்டு இலாபத்தில் 5% தொகை AAIB ஒதுக்கத்திற்காக ஒதுக்கீடு செய்தல் சபையின் கொள்கையாக அமைவதோடு அக்கொள்கைக்கிணங்க உரியவகையில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

### 2.2.3 <u>விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்</u>

**(I)** இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள காப்புறுதி வருமானம் சரியானதென்பதோடு எதிர்வரும் ஆண்டுக்காக கிடைத்த வருமானத்திற்காகவும் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும் காப்புறுதிப் பிரிவினால் காப்புறுதி வருமானம் கணிக்கப்படுகையில் காசு அடிப்படையில் கணப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. எனவே நிதிப் பிரிவிலன் தரவுகளையும் காப்புறுதிப் பிரிவின் தரவுகளையும் ஒப்புநோக்குதல் நடைமுறைச்சாத்தியமானதன்று.

**(II)** இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் அட்டுறு அடிப்படையில் காப்புறுதி இழப்பீட்டுச்செலவு கணிக்கப்பட்டுள்ளதோடு அதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காசு அடிப்படையில் கணிப்பிடப்பட்ட செலவுகளே காப்புறுதிப் பிரிவினால் காப்புறுதிச் செலவாக காட்டப்பட்டுள்ளமையால் நிதிப்பிரிவின் கப்புறுதிச் செலவினை ஒப்பிடுவது நடைமுறைச்சாத்தியமானதன்று.

### 2.2.4. <u>வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்</u>

**(அ) <u>இடர்க் கடன் ரூ.</u>** <u>924738.22</u>

2014.12.31 ஆந் திகதியில் அறவிடப்படவேண்டிய இடர்க்கடன் மீதி ரூ. 924738.22 பணத்தொகையில் ரூ. 140018.41 பணத்தொகை அறவிடப்பட்டுள்ளதோடு மீதி ரூ. 784719.81 ஆகும். கோரிக்கைப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த கடன்படுனர் மத்தியில் இந்த கடன் மீதியில் உள்ளடங்கிய மூன்று கடன்படுனர்களின் முகவரிகள் மாற்றப்பட்டுள்ளமையால் திரும்பி வந்திருந்தன. அதற்கிணங்க அவர்களின் தற்போதய வதிவு முகவரிகளைக் கண்டுபிடித்து இந்த கடன்படுனர் மூவரையும் உள்ளிட்டதாக 7 கடன்படுனர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனோடு தொடர்புடைய கடன்தொகை ரூ. 432651.89 ஆகும். இறந்த மூன்று கடன்படுனர்களின் பணிக்கொடைத் தொகையிலிருந்து சம்பந்தப்பட்ட பணத்தொகையை அறவிட்டுக்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதோடு இது சம்பந்தமாக மீண்டும்

மரபுரிமையாளர்களை அழைத்து தீர்மானம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு கடன்படுனரின் ஒழுக்காற்று விசாரணை அறிக்கை அடுத்த பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூ. 91533.00 பணத்தொகை பணக்கொடையிலிருந்து அறவிடப்பட உள்ளது. 1982 ஆம் ஆண்டில் இருந்த 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியுடன் தொடர்புடையதாக எஞ்சிய கடன்படுனர் 15 பேர் சம்பந்தமான தகவல்களைத் தேடிக்கொள்ள இயலாமையால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து தீர்மானமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>பண்டிகை முற்பணம் ரூ.</u>** <u>48750.00</u>

இந்த கடன்படுனர்களுக்கு கடிதங்களும் கோரிக்கைக் பத்திரங்களும் அனுப்பியுள்ளபோதிலும் எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை. கடன்படுனர்களின் கடன் எல்லை ரூ. 4500 தொடக்கம் ரூ. 300 வரையான பரப்பில் காணப்படுவதாலும் இதற்காக பிணைகாரர்கள் இல்லையென்பதாலும் பணிப்பாளர் சபைக்கு மீண்டும் அறிவித்து தீர்மானமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். கடன்படுனர்களின் எண்ணிக்கை 36 ஆகும்.

**<u>விசேட முற்பணம் ரூ.</u>** <u>15050.00</u>

ஒரு கடன்படுனரிடமிருந்து கடன் அறவிடப்பட்டுள்ளது. இந்த கடன்படுனர்களுக்கும் கடிதங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் பிரதிபலிப்பு காட்டவில்லை. கடன்படுனர் இருவருக்காக இடர்க்கடன் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது. எஞ்சிய கடன்படுநர்களுக்கு மீண்டும் கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுப்பதோடு பிரதிபலிப்பு கிடைக்காவிடின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்காக ஆற்றுப்படுத்தப்படும். கடன் மீதி ரூ. 14150.00 ஆகும். கடன்படுனர்கள் 15 பேர். கடன் எல்லை ரூ. 2000 – ரூ. 300 பரப்பெல்லைக்குள் அமைந்துள்ளது.

**<u>மோட்டார் சைக்கிள் கடன் ரூ.</u>** <u>152102.50</u>

கடன்படுனர் 07 பேர் ஆகும். இக்கடனுக்கான பிணைகாரர்களை தேடிக்கொள்வது சிக்கலாக அமைந்துள்ளது. மேலும் கடன்படுனர் இருவர் தொழில் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். ஒருவர் இறந்துள்ளார். மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியவர்களின் கடன்தொகை ரூ. 1312.50 ஆக அமைந்துள்ளதால் பணிப்பாளர்சபை தீர்மானத்திற்காக சமர்ப்பிக்கிறேன்.

**<u>விசேட ஊழியர் கடன் ரூ.</u>**<u>4800.00</u>

கடன்படுனர் 04 பேர் ஆவர். ஒருவர் இறந்துள்ளார். எஞ்சிய மூவருக்கு கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ)** கமக்காரர் ஓய்வூதியப் பிரிவுக்க வழங்கிய கடனையும் அதனோடு தொடர்புடைய வட்டியையும் படிப்படியாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) அப்பணத்தொகையை படிப்படியாக அந்த நிறுவனத்திற்கு செலுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஈ) சம்பந்தப்பட்ட சம்பளத்தை செலவுமீளளிப்பு செய்யுமாறு ஏற்புடைய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2.2.5. <u>கணக்காய்வுக்குச் சமர்ப்பியாத சான்றுகள்</u>**

கணக்காய்வுக்குப் போதியளவிலான சான்றுகள் கிடைத்துள்ளன. கிடைக்கவேண்டிய தவணைப்பண வருமானம் இன்றளவில் கிடைத்துள்ளதோடு தரகு செலுத்துதல் முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.கால்நடைக் காப்புறுதிக்கான முற்கொடுப்பனவுகளுக்காக போதியளவிலான சான்றுகள் கிடைத்துள்ளன.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை**

**(அ) <u>தாபனவிதிக் கோவையின் 13.3 இன் பகுதி 11</u>**

12 பதவிகள் தொடர்பில் நிலவுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்காக கடந்த ஆண்டின் செத்தெம்பர் மாதத்தில் பகிரங்க செய்தித்தாள் அறிவித்தல் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும் சனாதிபதி தேர்தல் காரணமாகவும் முகாமைத்துவ தீர்மானத்தின் பேரிலும் நிரந்தர ஆட்சேர்ப்புத் தீர்மானத்தையும் அமுலாக்க இயலாதுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட பதவிகளில் 3 உதவிப் பணிப்பாளர் பதவிகளை கடமைகளை ஈடேற்றும் அடிப்படையில் பேணிவர நேர்ந்துள்ளது. பணிப்பாளர் பதவிகளின் வெற்றிடங்களை பூர்திசெய்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினால் அச்சந்தர்ப்பத்தில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேலே குறிப்பிட்ட காரணங்களின் பேரில் விண்ணப்பங்களைக் கோரி ஆட்சேர்ப்பினை அமுலாக்க இயலாமல் போயிற்று. இதனால் தற்போது அப்பதவிகளின் கடமைகளையும் உள்டக்கியதாக புரிகின்ற உத்தியோகத்தர்களைத் தொடர்ந்தும் கடமைகளை ஈடேற்றும் அடிப்படையில் வைத்துக்கொள்ள நேர்ந்துள்ளது. பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் உறுகின்ற நிலைமையின் கீழ் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர்சபைத் தீர்மானத்தின்பேரில் சம்பந்தப்பட்ட பதவிகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(ஆ) <u>(I) மற்றும் (II) 2006.09.22 திகதிய நிர்வாக சேவை சுற்றறிக்கை 30 மற்றும் 30(I) (II)</u>**

சம்பள ஏற்றங்களில் அமர்த்துகையில் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகள் சம்பந்தமாக தற்போத பெயர்வழிக் கோப்புகளை இற்றைப்படுத்தும் செயற்பாட்டில் பரிசோதனை செய்யப்பட்டு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பணியை ஈடேற்றுவதற்காக நிர்வாகப் பிரிவில் போதியளவிலான ஊழியர்கள் இன்மையே இங்கு தற்போது தோன்றியுள்ள பிரதான சிக்கலாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும் ஒரு பெண் உத்தியோகத்தரால் தற்போது அப்பணி ஈடேற்றப்படுவதோடு படிப்படியாக மேற்படி சம்பளப் படிநிலைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. <u>நிதிசார் மீளாய்வு</u>**

**3.1.1 <u>நிதிப் பெறுபேறுகள்</u>**

### 3.1.2 நிதிநிலைமை பற்றிய பகுப்பாய்வுரீதியான மீளாய்வு

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### காப்புறுதித் திட்டங்களின் நிர்வாகம்

### 4.2 தாமதித்த கருத்திட்டங்கள்

1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கமத்தொழில் மற்றம் கமநலக்காப்புறுதிச் சபைக்கு இற்றைவரை ஒரு தலைமையகம் கிடையாது. தலைமையகத்தை அமைப்பதற்காக காணியொன்றை ஒதுக்கித்தருமாறு காணி அபிவிருத்தி அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் விளைவாக ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லையில் அமைந்துள்ள நிலப்பரப்பிலிருந்து 0.502 ஹெட்டெயார் காணித்துண்டு கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபைக்க கையளிக்கப்பட்டது. அந்த நிலப்பரப்பில் கட்டடமொன்றை அமைப்பதற்கான் பூர்வாங்க சாத்தியவள அறிக்கையொன்றைப் பெற்றக்கொள்வதற்காக காணி மீட்டல் அதிகாரசபைக்கு இந்த ரூ. 585,800 பணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையை அடிப்படையாகக்கொண்டு தலைமையக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு திறைசேரி எற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டிலிருந்து சபையின் மறுசீரமைப்பு செயற்பாடொன்று அமுலில் உள்ளமையால் இக்கருத்திட்டத்திற்காக நிதியமைச்சின் ஊடாக ஏற்பாடுகளை ஒதுக்கிக்கொள்வதில் தடை நிலவுகின்றது.

தற்போது பிரத்தியேக கட்டடமொன்றில் வாடகை அடிப்படையில் தலைமையகம் பேணிவரப்படுவதால் நிரந்தரக் கட்டடமொன்றுக்கு அலுவலகத்தை எடுத்துச் செல்வதிலான தேவை நிலவுகின்றது. இதனால் பத்தரமுல்லையில் ஒதுக்கப்பட்டுள்ள காணியில் எதிர்காலத்தில் அமைச்சினூடாக நிதியேற்பாடுகளைப் பெற்றுக்கொண்டு கட்டடமொன்றை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. ஏதேனும் விதத்தில் இக்கருத்திட்டம் அமுலாக்கப்படமாட்டாதெனில் செலுத்திய பணத்தொகையை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.3 பாவனைக்க எடுக்காத சொத்துக்கள்

இன்றளவில் சம்பந்தப்பட்ட 7 ஜீப் வண்டிகயில் பொலெறோ வகையைச் சேர்ந்த 5 ஜீப் வண்டிகள் கமத்தொழில் அமைச்சினால் கையேற்கப்பட்டுள்ளது. ஒரு ஜீப் வண்டியை FAO நிறுவனம் கையேற்க நடவடிக்கை எடுத்துள்ளது. எஞ்சிய ஜீப் வண்டி விவசாய அபிவிருத்தி அதிகார சபையினால் கையேற்கப்பட்டுள்ளதோடு அந்நிறுவனம் தற்போது இயங்குவதில்லையென்பதால் கையேற்றல் பற்றிய சிக்கல் தோன்றியுள்ளது.

### 4.4 மனிதவள முகாமைத்துவம்

**(அ)** 2009 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டம் மூலமாக அப்போது நிலவிய செயற்பொறுப்பு மற்றும் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு குறைந்தபட்சம் மாவட்ட அலுவலகங்களுக்கு முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் வீதம் இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் பல்வேறு நோய்கள் மற்றும் வசதியீனங்களளை கருத்திற்கொண்டும் அரசியல் அதிகாரிகளின் பணிப்புரையின்பேரில் அநுராதபுரம், தம்புத்தேகம, கண்டி, மாத்தளை மற்றும் கேகாலை போன்ற மாவட்ட அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்ற ஊழியர்கள் 20 பேர்களின் மிகைநிலை நிலவுகின்றது. இதனால் தலைமையகத்திலன் பிரவுகளில் 30 வெற்றிடங்கள் பதிவாகியபோதிலும் இந்த மேலதிக எண்ணிக்கையை தலைமையகத்தில் சேவைக்காக இணைத்தலில் சிக்கல் நிலவுகின்றது. எவ்வாறாயினும் தற்போது சபையின் செயற்பொறுப்பு விரிவடைந்தமையின்பேரில் மாவட்ட அலுலகங்கள் போதுமானதாக அமையாததால் அதற்கமைவாக மனிதவளத் திட்டத்தை திருத்தியமைத்து பதவியணியை புதிதாக அங்கீகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ)** இந்த ஊழியர்கள் வெளி அமைச்சுக்களில் தற்காலிகமாக மாத்திரம் இணைக்கப்பட்டுள்ளமையால் அவர்களுக்குப் பதிலாக ஆட்சேர்ப்பினை செய்ய இயலாதுள்ளது.

**(இ)** சம்பந்தப்பட்ட வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் தேர்தல் நடவடிக்கை காரணமாகவும் புதிதாக நியமிக்கப்பட்ட முகாமைத்துவம் இது சம்பந்தமாக இற்றைவரை தீர்மானமொன்றை மேற்கொள்ளாமையாலும் ஆட்சேர்ப்பினை செய்ய இயலாதுள்ளது.

## 4.5 <u>கருத்துபேதத்திற்கு ஏதுவான காரணங்கள்</u>

2014 ஆண்டின் பின்னரைப்பாகத்தில் அச்சிடப்பட்ட பஞ்சாங்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அளவினை சனாதிபதி தேர்தல் காரணமாக பகிர்ந்தளிக்க இயலாமல் போனதால் எஞ்சியிருந்தது. இந்த பஞ்சாங்கங்கள் 2015 ஆம் ஆண்டுடன் தொடர்புடையனவாக அமைவதால் பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5. <u>வகைபொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்</u>

## 5.1 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

பாதீட்டுக் கட்டுப்பாட்டினை சபையின் நல்லாட்சிக்காக பிரயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 6. <u>முறைமைகளும் கட்டுப்பாடும்</u>

சென்மதியான மற்றும் வருமதியான கணக்குகள், வாகனப் பயன்பாடு, பாதீடு, தனிப்பட் முகாமைத்துவம் ஆகிய முறைமைகளில் சிறந்த கட்டுப்பாட்டினை உருவாக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams: රක්ෂණ / ரக்ஷன / Rakshana
267, යූනියන් පෙදෙස, කොළඹ 2.
267, யூனியன் இடம், கொழும்பு 2.
267, UNION PLACE, COLOMBO 2.
තැ. පෙ. 21, த. பெ. 21 P.O. Box 21

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No.: 2014/4/5/மு/ர/2
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No.: ..........
දිනය / திகதி / Date: 2015-06-09

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2014 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 14(2)(சீ) அறிக்கைக்கான பதில்களை வழங்குதல்.</u>**

2014 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பமிட்டது/ பண்டுக வீரசிங்க,

பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை.

| | සභාපති / தலைவர் / Chairman | සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephones | 448693 / 448694 | 438607 | 448691-2 / 438606 / 430058 |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 449316 | 438607 | |

**<u>கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (C) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்</u>**

**2. நிதிக் கூற்றுகள்**

**2.1 வெளிப்படுத்திய அபிப்பிராயம்**

**2.2 <u>நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்</u>**

**2.2.1 <u>செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை</u>**

153/49 ஆம் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை திருததியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு சுய நிதியீட்டல் அடிப்படையில் பேணிவரக்கூடிய புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்று அதன் மூலமாக அறிமுகஞ் செய்யப்பட்டது. நிதியங்கள் பூச்சியநிலைறயுற்றதால் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்த கமக்காரர் ஓய்வூதியமும் இன்றளவில் தொடர்ச்சியாக செலுத்தப்பட அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு 2014 வரவு செலவுத் திட்டம் மூலமாக முன்மொழியப்பட்ட 1000 மில்லியன் ரூபா திறைசேரி முறியும் நிதியத்தைப் பலப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2015 வரவு செலவுகள் மூலமாக 2276 மில்லியன் ரூபா பணத்தொகை கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதோடு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக முறையே 2160 மில்லியன் ரூபாவும் 2200 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது. எனவே செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை பற்றிய சிக்கல் எதிர்காலத்தில் தோன்றாது.

**2.2.2 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகாமை**

**(அ)** அடுத்துறும் கணக்காண்டில் காசுப்பாய்வு வகைப்படுத்தலை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்டும்.

**(ஆ)** முந்திய ஆண்டுக்கான சீராக்கல்களுடன் தொடர்புடைய விகரங்கயை வருங்காலத்தில் வெளிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(இ)** முழுமையாக தேய்மானம் செய்யப்படுகின்ற சொத்துக்கள் சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தபோலும் கணக்குகளில்

வெளிப்படுத்தப்பட்டிராமையால் எதிர்வரும் ஆண்டில் சம்பந்தப்பட்ட வெளிப்டுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

**(ஈ)** நிகழ்காலத்தில் கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தில் தோன்றிய நிலைமையின் பேரில் மறுசீரமைத்தல் செயற்பாட்டுக்கிணங்க ஓய்வூதியப் பொறுப்பு மீண்டும் மதிப்பீடு செய்யப்பட எதிர்பர்க்கப்படுகின்றது.

**(உ)** இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அரச கொடை சரிவர

கணக்குப்பதியப்பட்டுள்ளது.

**(ஊ)** அடுத்துறும் கணக்காண்டில் தொடர்புடைய தரப்பினர்களுக்கு சம்பந்தப்பட்ட கெடுக்கல் வாங்கல்களை முறையாக சமர்ப்பிக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ)**வருமதியான வருமானம் என்றவகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த இந்த கணக்குகள் காசும் காசுக்குச் சமமானவையும் என்றவகையில் சமர்ப்பிக்கப்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**(ஆ)**தேறிய தவணைப்பணச் செலவு வருமானக் கணக்கிற்கு தவறுதலாக பற்றுவைக்கப்ட்டுள்ளது. என்னும் தேறிய வருமானத்திற்கு தாக்கம் ஏற்படவில்லை.

**(இ)** பணிக்கொடைப் பொறுப்பு கணிப்பிடப்படுகையில் எதிர்காலத்தில் தேன்றக்கூடிய நிகழ்தகவுகளும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூ. 3000 இடைக்காலக் கொடுப்பனவு அடிப்டைச் சம்பளத்துடன் எதிர்காலத்தில் சேர்க்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தமையால் பணிக்கொடைப் பொறுப்பு கணிக்கப்படுகையில் இது ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்டது.

**(ஈ)** மீதியை உறுதிப்படுத்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த அனைத்து வருமானங்களும் கணக்காண்டுக்குப் பின்னர் கிடைத்த முந்திய ஆண்டுடன் தொடர்புடைய அனைத்து வருமானங்களும் இனங்காணப்பட்டு கணக்குப்பதியப்பட்டுள்ளன.

**2.2.4 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்**

**(அ)** வருமதியான தவணைப் பணத்திற்காக மீதியை உறுதிப்படுத்தல்களை அனுப்பிவைக்குமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. கிடைக்கவேண்டிய வருமானமாக கணக்குப் பதியப்பட்டுள்ள அனைத்துப் பணத்தொகைகளுக்காகவும் மீதியை உறுதிப்படுத்தல்கள் இல்லாதிருப்பினும் அவ்வாண்டுக்குப் பின்னர் அப்பணத்தொகை சபைக்க கிடைத்துள்ளது.

**(ஆ)** கணக்காய்வுக் கட்டணங்களை படிப்படியாக செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(இ)** சபையின் ஏனைய நிதியங்களிலிருந்து கமக்காரர் ஒய்வூதியம் செலுத்துவதற்காக பெறப்பட்டுள்ள பணத்தொகையினை எதிர்காலத்தில் செலுத்தித்தீர்க்க அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஈ)** இவ்வாண்டில் ரூ. 10,000 ஐ அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு எஞ்சிய பணத்தை இடையறாமல் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**(உ)** புதிய ஓய்வூதியத் திட்டத்தில் அதிக நன்மைகள் கமக்காரர்களுக்கு கிடைப்பதால் இப்பணத்தொகையினை ஈடுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்டும்.

**2.3 <u>சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை</u>**

**(அ)** மதியுரைக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் தீர்ந்த பின்னர் அதற்கான உறுப்பினர்களை மீண்டும் நியமிப்பதற்காக நிதியமைச்சின் செயலாளர் ஊடாக சமபந்தப்பட்ட நிறுவனங்களுக்க அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்விதமாக மதியரைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காத நிறுனங்களுக்கு அதுபற்றி அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) (i)** நிதிப் பிரிவில் ஊழியர் வெற்றிடங்கள் நிலவுவதால் சம்பந்தபபட்ட ஆட்சேர்ப்பு இடம்பெற்ற பின்னர் வேலைகள் பகிர்ந்து செல்லக்கூடிய விதத்தில் கடமைகளைக் கையளிக்கநடவடிக்கை எடுக்கப்படும். ஆயினும் கண்க உத்தியோகத்தரின் பூரணமான மேற்பார்வைக்கும் பரிசோதனைக்கும் காசேடுகளும் வங்கி இணக்கக்கூற்றுகளும் இலக்காகும்.

**(ii)** சம்பந்தபட்ட நிதிப்பிரமாணங்கள் ஏற்புடைய அரச திணைக்கள ஊழியர்களுக்கு ஏற்புடைத்தாவதோடு கமத்தொழில் மற்றும் கமலக் காப்புறுதிச் சபை சட்டத்திற்கிணங்க பணிப்பாளர்சபை மேற்கொள்ளும் தீர்மானங்களே சபைக்கு ஏற்புடையனவாகும்.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் பெறுபேறுகள்**

**3.2 நிதி நிலைமை பற்றிய பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

**(அ)** **(i)** ஒய்வூதியத் திட்டம் மேம்படுத்தப்படாமையால் 2010 தொடக்கம் 2014 வரை வருமானம் குறைவடைந்துள்தோடு வயது 60 வருடங்களைப் பூர்த்தி செய்தமையால் பெருந்தொகையாளோர் ஓய்வூதியப் பெறுவதற்கான தகைமையைப் பெற்றமையாலும் மேலும் ஒரு பகுதியினர் திட்டத்தில் சேர்ந்ததால் செலவுகள் படிப்படியாக அதிகரித்துள்ளன.

**(ii)** கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுகளில் சரியான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அதற்கிணங்க ஓய்வூதிய பொறுப்பு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. வருடந்தோறும் கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் பொறுப்பு அதிகரித்தமையால் பற்றாக்குறையும் படிப்படியாக அதிகரித்துள்ளது.

**(iii)** கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் இடையறா வழியுரிமைக்காக அரச ஏற்பாடுகளைப் பெற்றுக்கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்வரும் மூன்று வருடங்களில் 5000 மில்லியன் ரூபா திறைசேரி முறிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக 2015 வரவுசெலவுத் திட்டம் மூலமாக முன்மொழியப்பட்டுள்ளது.

**4 தொழிற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**(அ)** 2010 ஆகஸ்ற் மாதத்தில் இருந்து கமக்கபார் ஒய்வூதிய நிதியம் பூச்சியநிலையடைந்த பின்னர் மென்மேலும் திட்டத்திற்கு சேர்த்துக்கொள்வதன் மூலமாக திட்டத்தின் பொறுப்பின் அளவு அதிகரிக்கின்றமையால் நிதிநெருக்கடி மேலும் அதிகரிப்பதால் 2010 ஆகஸ்ற் மாதத்தில் இருந்து திட்டத்திற்கு கமக்காரர்களை சேர்த்துக்கொள்வது இடைநிறுத்தப்பட்டது.

அதற்கிணங்க இத்திட்டத்தின் அமுலாக்கல் தொடர்பிலான நிரந்தரமான தீர்வொன்றுக்கு வரும்வரை 2013 ஆம் ஆண்டிலும் எவரையும் சேர்த்துக்கொள்ளவில்லை என்பதால் பங்களிப்புத் தவணைகள்

குறைவடைந்துள்ளன. வயது 60 வருடங்கள் பூர்த்தியடைந்து உதவுதொகை செலுத்துனர்கள் ஒய்வூதியம் பெறுவதற்கான தகைமையைப் பூர்த்திசெய்தமையால் ஓய்வூதியம் அதிகரித்துள்ளது.

**(ஆ)** ஓய்வூதியத் திட்டத்தின் உதவுதொகை செலுத்துனர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமையால் பிந்திய தவணை அறவீடு வீழ்ச்சியடைந்துள்ளது.

**(இ)** சட்டத்திற்கிணங்க திட்டத்திலிருந்து நீங்குகின்ற உதவுதொகை செலத்துனர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்கள் செலுத்திய தவணைகளும் வட்டியும் செலுத்தப்பட்டுள்ளது.

**(ஈ)** திட்டத்திற்குச் சொந்தமான முதலீடுகளை ஒய்வூதியம் செலுத்துவதற்காக ஈடுபடுத்தியமையால் சபையின் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் 2013 ஆம் ஆண்டு வரை படிப்படியாக குறைவடைந்துள்ளது.

**(உ)** 2014 திசெம்பர் வரை செலுத்துவதற்காக ஆற்றுப்படுத்திய அளவில் எஞ்சிய அளவு ஒய்வூதிய உரிமை பெற்றுள்ளவர்களுக்காக இன்றளவில் செலுத்தி நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

**4.2 வங்கிக்கணக்கு செயற்பாட்டிலான குறைபாடுகள்**

**(அ)** 20 வருடங்களுக்கு மேலாக பழமை வாய்ந்த இந்த தேறாத காசோலைகளை கணக்குகளிலிருந்து பதிவழிக்க அவசியமான நடவடிக்கைகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

சபையின் தலைமையகமும் 26 மாவட்ட அலுவலகங்களும் இயங்கிவருகின்றன. இன்றளவில் கமக்காரர் ஒய்வுதியத் திட்டத்தில் 950,000 உதவுதொகை செலுத்துனர்கள் சேர்ந்துள்ளனர். 22 வருடங்களாக கணனிமயப்படுதகும் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிலவிய தொழில்நுட்ப அளபுருக்களுக்கு அமைவாக கணனிக் கருவிகளும் மென்பொருள்களும் கொள்வனவுசெய்து அவசியப்பாட்டுக்கிணங்க ஈடுபடுத்தப்பட்டபோதிலும் கொள்திறன் அதிகரிக்கப்பட்டதன் காரணமாகவும் அவசியப்பாட்டு மட்டம் மாற்றமடைந்ததாலும் புதிய தொழில்நுட்பத்துடன் ஒத்துவரத்தக்கதாக தகவல்களை இற்றைப்படுத்தவேண்டிய அவசியம் தோன்றியதால் இந்த செலவினை ஏற்க

நேரிட்டுள்ளது. இன்றளவில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் ஒன்றுசேர்ந்து அதிக கொள்திறன்கொண்ட கணனி முறைமை நிறுவப்பட்டு கொள்திறனுக்கேற்றவகையில் மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி கணனி மென்பொருள் முறைமையிலிருந்து அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தரவுகளை கணனியில் உள்ளீடுசெய்து வருவததோடு உறுப்பாண்மை பற்றிய அனைத்துவிதமான தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. 22 வருடங்களாக இயங்கிவந்த செயற்றிட்டத்தில் 950,000 ற்கு மேற்பட்ட உதவுதொகை செலுத்துனர்கள் சேர்ந்துள்ள தருணமொன்றில் ஆண்டுக்கு இரண்டுதடவை வீதம் தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளவிடத்து மில்லியன் கணக்கான பிந்திய தவணைகளை கணனிமயப்படுத்தும் சிக்கல் மாத்திரம் தோன்றி உள்ளது.

## 4.4 கருத்துபேதத்திற்கு ஏதுவான காரணங்கள்

**(அ)** மாவிலாறு சம்பவத்தினால் சேதமேற்பட்ட கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்துகையில் இடம்பெற்றுள்ள இந்த சிக்கலான சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

**(ஆ)** இந்த தவணைப்பண மோசடியுடன் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர் திரு. சுசில் பிரேமரத்ன தொழில் இடைநிறுத்தத்திற்கு இலக்காகி இருந்ததோடு அவருக்கு எதிராக HC/5/2009 இலக்கமுடைய வழக்கு அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அவர் ரூ. 100,000 பணத்தொகையை மாத்திரம் சபைக்கு செலுத்தியிருந்த வேளையில் இறந்துள்ளார். இதன் காரணமாக அவருக்கு எதிராக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதென்பதால் சம்பந்தப்பட்ட வழக்கு அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து தீர்மானமொன்றை எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறிவிக்கிறேன்.

**(இ)** 2012/2013 ஆண்டுகளில் கமக்கார் ஒய்வூதியம் செலுத்தப்படவில்லை என்பதோடு 2014 ஆம் ஆண்டில் புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டமொன்று அறிமுகஞ் செய்யப்பட்டது. அதற்கிணங்க கமக்காரர் ஒய்வூதியம் செலுத்தப்படாமையால் சபைமீது உருவாகியிருந்த பாதகமான உளப்பாங்கினை நீக்கி சபையின் அலுவல்கள் பற்றிய விரிவான பிரச்சாரமம் மக்களின் பாராட்டும் கிடைக்கத்தக்க

வகையில் நாட்டின் அனைத்த மாவட்டங்களையும் உள்ளடக்கத்தக்கதாக மாவட்டச் செயலாளர்களினதும் பிரதேச செயலாளர்களினதும் பங்கேற்புடன் ஓய்வூதியம் செலுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன்போத 100 ற்க மேற்பட்ட பிரதேச ஓய்வூதியம் செலுத்தும் கூட்டங்கள் நடத்தப்பட்டதோடு சனவரி மாதத்திற்காக 113,011 கமக்காரர்களுக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. இதற்கிணங்க கமக்காரர் ஒருவருக்காக 60 ரூபாவுக்கு கிட்டிய தொகையே செலவிடப்பட்டுள்ளது.

## .5 வகைபொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்

### 5.1 செயற்பாட்டுத் திட்டம்

நிறுத்தப்பட்டிருந்த கமக்காரர் ஓய்வூதியத்திட்டத்தை மீண்டும் அமுலாக்கி செலுத்துவதற்காக அதிக கவனம் செலுத்தப்பட்டதோடு தற்போது அ செயற்றிட்டத்தில் சேர்ந்துள்ள உதவுதொகை செலுத்துனர்களின் முனைப்பான தன்மையயை ஆராய்வதற்கான மதிப்பாய்வொன்றினை நடத்த எற்பாடு செய்யப்பட்டுள்ளது. கமக்காரர்களை சேர்த்துக்கொள்ளல் சம்பந்தமாக செயற்பாட்டுத் திட்டமொன்று 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

செயற்றிட்டத்தை மறுசீரப்புக்கு இலக்காக்கிக் கொண்டிருந்தமையால் வரவு செலவு மூலமாக எதிர்பார்த்த இலக்குகளை அடைய இயலாமல் போயிற்று.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடும்

கணக்கீடு, உதவுதொகை செலுத்துனர் கணக்குக் கட்டுப்பாடு, ஓய்வூதியம் செலுத்துதல், வரவு செலவு, வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள் ஆகிய முறைமைகளில் சிறந்த கட்டப்பாட்டினை மேற்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
**AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD**

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams } රක්ෂණ / ரக்ஷன / Rakshana
267, යුනියන් පෙදෙස, කොළඹ 2.
267, யூனியன் இடம், கொழும்பு 2.
267, UNION PLACE, COLOMBO 2.
තැ. පෙ. 21, த. பெ. 21 P.O. Box 21

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No. } 2014/4/5/மு/தீ/2 ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No. } ......... දිනය / திகதி / Date } 2015-06-24

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2014 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 14(2)(சீ) அறிக்கைக்கான பதில்களை வழங்குதல்.</u>**

2014 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பமிட்டது/ பண்டுக வீரசிங்க,

பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை.



| | දුරකථන / தொலைபேசி / Telephones | ෆැක්ස් / பெக்ஸ் / Fax |
|---|---|---|
| සභාපති / தலைவர் / Chairman | 448693 / 448694 | 449316 |
| සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager | 438607 | 438607 |
| ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office | 448691-2 / 438606 / 430058 | |

**<u>கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (C) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்</u>**

**2. நிதிக் கூற்றுகள்**

**2.1 <u>அபிப்பிராயம்</u>**

**2.2 <u>நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்</u>**

**2.2.1 <u>செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை</u>**

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் எதிர்கால பொறுப்புக்கள் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக் கூற்றுகளில் வெளிக்காட்டப்பட்டுள்ளன. இந்த செயற்றிட்டமானது நிதிரீதியான சாத்தியவளமற்ற அரச மானியத்தினை அடிப்படையாகக்கொண்ட செயற்றிட்டமாக அமைவதால் இவ்விதமாக எதிர்கால பொறுப்பு உயர்வடைந்துள்ளது. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தையும் மறுசீரமைக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.2.2 <u>கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகாமை</u>**

**(அ)** அடுத்துறும் கணக்காண்டில் சம்பந்தப்பட்ட காசுப்பாய்வு தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்வாக காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஆ)** 2007 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தின் பொறுப்பு பற்றிஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதோடு அதனை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் ஆயுட்கணிப்பாளர் ஒருவரைக் கொண்டு மீண்டும் பொறுப்பினை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.2.3 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>**

**(அ)** கடற்றொழில் அமைச்சின் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள் மூலமாக இந்த கணக்குகள் பேணப்பட்டு வருகின்றன. தலைமையகத்தின் சேகரித்தல் கணக்கிற்கு

வழங்கப்படுவது தாமதமாகியுள்ள மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய மீதிகளாக கணக்குப் பதியப்பட்டுள்ளது. எனவே சபையின் நடைமுறைப் பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

**(ஆ)** சபை பணிக்கொடை ஒதுக்கீட்டினை சரியான விதத்தில் மேற்கொண்டுள்ளது.

**2.2.4 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்**

**(அ)** ஓய்வூதிய செயற்றிட்டத்தில் தோன்றிய நிதிநெருக்கடி தொடர்பாக பொது திறைசேரியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டவாறு செலவுமீளளிப்பு அடிப்படையில் இந்த பணம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கடன்தொகையினை படிப்படியாக தீர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ஆ)**கணக்காய்வுக் கட்டணங்களை எதிர்காலத்தில் படிப்படியாக செலுத்தித்தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை**

**(அ)** **(i)**கடற்றொழிலாளர் ஓய்வூதிய மதியுரைக்குழு உறிப்பினர்களின் பதவிக்காலம் தீர்ந்த பின்னர் அதற்கான உறுப்பினர்களை மீண்டும் நியமிப்பதற்காக நிதியமைச்சின் செயலாளரால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்விதமாக மதியுரைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காத நிறுவனங்களுக்கு அது பற்றி அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ii)**தொடர்ச்சியாக 5 தவணைகளக்கான பணத்தைச் செலுத்த தவறினால் கடற்றொழிலாளர்களின் அங்கத்துவம்அற்றுப்போகுமென்பது திட்டத்தில் சேர்கின்ற வேளையிலேயே முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அங்கத்துவமிழந்த உதவுதொகை செலுத்துனர்களுக்கு அவர்களின் வயது 60 வருடங்கள் நிறைவடைந்த பின்னர் அவர்களால் சபைக்குச் செலுத்தபட்ட பணமும் வட்டியும் மீளச்செலுத்தப்படுவதோடு கடற்றொழில் திணைக்களத்தின் உதவி மாவட்ட அலுவலகங்களால் அவ்விதமாக அறிவிக்கப்பட்ட உதவுதொகை செலுத்துனர்களுக்கு இவ்வாண்டிலும் பணதொகையும் வட்டியும் மீளச்செலுத்தப்பட்டுள்ளது.

**(ஆ)** கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை சட்டத்தின் பிரகாரம் செவையாற்றுகின்ற சபை உத்தியோகத்தர்களுக்கு கடற்றொழில் அமைச்சுக்குரிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் மேலதிக கடமைப்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்திற்கான இச்சபையின் செயற்பொறுப்புக்காக தனிவேறான பதவியணி அங்கீகரிக்கப்படாமை காரணமாக இந்த வேலைகளையும் உள்ளடக்கிப் புரிவதற்காக இந்த கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. இது 1991 இல் ஓய்வூதியத் திட்டம் தொடங்கிய திகதியிலிருந்தே செலுத்தப்பட்டுள்ளது.

இந்த கொடுப்பனவுக்காக கீழ்க் காணும் அங்கீகாரங்கள் கிடைத்துள்ளன. .

1. கடற்றொழிலாளர் ஒய்வூதிய மதியுரைக்குழுவின் அங்கீகாரம்
1. .பணிப்பாளர் சபையின் அங்கீகாரம்
1. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் இராஜாங்க செயலாளரின் அங்கீகாரம்.

**3.** <u>**நிதிசார் மீளாய்வு**</u>

**3.1** <u>**நிதிசார் பெறுபேறுகள்**</u>

**3.2** <u>**நிதிநிலைமை பற்றிய பகுப்பாய்வுரீதியான மீளாய்வு**</u>

**4.** <u>**தொழிற்பாட்டு மீளாய்வு**</u>

**4.1** <u>**செயலாற்றுகை**</u>

**(அ),(ஆ),(இ),(ஈ)**

இந்த செயற்றிட்டம் கடற்றொழில் அமைச்சினாலும் கடற்றொழில் திணைக்களத்தினாலும் கூட்டாக அமுலாக்கப்படுவதோடு செயற்றிட்டத்தினை நிர்வகித்தல் மற்றும் கணக்குகளைப் பதிதல் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் செயற்பொறுப்பாக அமையும். செயலாற்றுகை சம்பந்தமாக கடற்றொழில் திணைக்களத்தினாலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**4.2** <u>**தொழிற்பாட்டு வினைத்திறமையீனம்**</u>

திட்டத்திலிருந்துஅங்கத்துவமிழந்த உதவுதொகை செலுத்துனர்கள் பற்றிய தகவல்கள் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் நிலுவைத் தவணைகளை அறவிடுதல் மற்றும் உதவுதொகை செலுத்துனர்களாக

தக்கவைத்துக்கொள்ளல் சம்பந்தமாகவும் கடற்றொழில் அமைச்சுடன் கூட்டாக எதிர்காலத்தில் செயலாற்ற அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 4.3 <u>வட்டி வருமானம் இனங்காணப்படுதல்</u>

கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியங்கள் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காக வழங்கிய கடன்தொகையாக கருதப்பட்டு செயலாற்றியமையால் மேற்படி வட்டி சீராக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கடனும் வட்டியும் படிப்படியாக தீர்க்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 5. <u>வகைபொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்</u>

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் மறுசீரமைக்கப்பட உள்ளமையால் சேர்த்துக்கொள்ளல் ஊக்குவிக்கப்படாமையால் இந்த நிலைமை உருவாகி உள்ளது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடும்

கணக்கீடு, கடற்றொழிலாளர்களுக்கான நன்மைகளை வழங்குதல், பாதீடு, வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள், பிந்திய தவணைகளை அறவிடல் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஏற்கெனவே தீவிர கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் தொடர்ந்திம் கவனஞ் செலுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.